ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 44] இரக்தாக்ஷி ஆண்டு மார்கழித்திங்கள் 10-1-85 [இத

தம்மைச் சூழ்ந்து தானியக் கதிர்கள் விளைந்து முதிர

தம் கையிலும் தானியக் கதிரேந்தி

அன்னை தானியலட்சுமியின் திருக்கோலம்

உழவர் திருநாளாகிய பொங்கல் திருநாளை முன்னிட்டு
இவ்விதழில் காட்சிதருகிறது.

தருமையாதீனக

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

முத்தன அனுதி யுயிர்க்குயி
ரானவன் முத்தசித்த
சுத்தன் அகண்ட பரிபூ
ரணத்தன் சுருதிக்கெட்டா
நித்தன் கருணைத் திருவுரு
வானவன் நின்மலத்தன்
அத்தன் கமலையுள் ஞானப்ர
காசனென் ஆண்டவனே.

— ஞானப்பிரகாசமாலை 4

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-

வித்துவான்
சி. அருணைவடிவேல்முதலியார்

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 12
ஆண்டுச் சந்தா சிலோன் 25
ஆண்டுச் சந்தா வெளிநாடு 35

உ

குருபாதம்

“ஞானசம்பந்தம்”

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 44 || 10–1–85 || இதழ் 2

உட்பொருள்

எண்		பக்கம்
1	வருக வருக! வளர்க வாழ்க! ...	69
2	தருமைஸ்ரீலஸ்ரீகுருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ...	75
3	மாண்புமிகு க. ராசாராம் அவர்கள் வழங்கிய பேருரை ...	79
4	இதழ்வழிச் சமயப் பயிற்சித் திட்டம் ...	84
5	வரவேற்பியற் கவிதை மலர் ...	85
6	அறுகம் புல் ...	88
7	மதிப்புரை ...	90
8	எல்லாமும்வல்ல சித்தர்	92
9	திருவருட்பாத்திரட்டு ...	96
10	அபிராமி அந்தாதி ...	99
11	கதிரவன் குடும்பம் ...	103
12	செய்திகள் ...	106
13	எதிர்காலம் ...	112
14	கடிதம் ...	116
15	திருநாவுக்கரசர் ...	117
16	நாவலரின் நற்சிந்தனை	124

ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 125
ஆயுள் சந்தா வெளிநாடு 350

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 44 | இரக்தாக்ஷி–மார்கழி–10–1–85 | இதழ் 2

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

வருக வருக! வளர்க வாழ்க!

வரவேற்கிறோம்!

திரு. ராஜிவ் காந்தி அபரிமிதமான வாக்குகள் பெற்றுப் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார். பிற எவரும் பெருத அளவு மக்கள் வாக்குக்களைப் பெற்றுப் பிரதமராகியுள்ளார். அமெரிக்கச் செய்தித் தாள்கள் அவரை வானளாவப் புகழ்ந்து வாழ்த்துகின்றன. முன்னாள் அமெரிக்க ஜனதிபதி ஜான் கென்னடியின் சாயல் இவர்பால் இருப்பதாகப் புகழ்கின்றன. இணையிலாத் தலைவராகத் திகழ்ந்த இந்திராகாந்திக்குப் பிறகு இவர் இந்நாட்டின் தலைமை பூண்டுள்ளது இறைவன் திருவருளே அன்றி வேறு இல்லை. இளைஞராகத் திகழும் இந்திரா காந்தியின்மைந்தர் ராஜிவ்காந்தி அரசியலில்புகுந்து ஆண்டுகள் சிலவே ஆனபோதிலும் ஆழ்ந்தநோக்கும்சுறுசுறுப்பும், ஆக்கத் திறமும் ஆர்வமிகுதியும், அறிவுத்தெளிவும்நிதானமும் கொண்டு செயல்படுவது கண்டு அவரை ஞானசம்பந்தம்வாழ்த்துகிறது. – வருக வருக என வரவேற்கிறது.

அன்னாரின் வானொலிப் பேச்சில் அநேக அம்சங்கள் அடங்கியுள்ளன. அவை பாராட்டிற்கு உரியவை. ஆனால்

சமயச் சார்பான அம்சங்கள் ஏதும் அதில் பேசப்படவில்லை. இந்திராகாந்தி அம்மையார் இறைப்பற்றுமிக்கவர். அம்மையார் ஆட்சிக்காலத்தில் சமயத்துறையில் ஆதரவாகவும் அனுசரணையாகவும்இருந்து உதவியது நாம் மறக்க முடியாத ஒன்று. திரு. ராஜிவ் காந்தியும் அன்னைவழியைப் பின்பற்றுவார் என நாம் எதிர்பார்க்கிறோம். திருவருள் துணைபுரிவதாக.

தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அமெரிக்க நாட்டில் அறுவை சிகிச்சை பெற்று ஆரோக்கியமுற்று வருகின்றார். பெரியார் பாசறையில் வளர்ந்துவந்த அரசியல்வாதியானாலும், இறைப்பற்றும் பக்தியும் மிக்கவராகவே திகழ்ந்து வந்துள்ளார். அன்னார் உடல்நலக்குறைவுற்று உயர்தர சிகிச்சைபெற்றுவருங்கால் நமது திருக்கோயில்களில் அவர் உடல் நலமுற விசேஷமான வழிபாடுகள் ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. எல்லாச் சமயக் கோயில்களும் அவர் தம் ஆரோக்கியம் கருதி வழிபாடுகள் நிகழ்த்தின. இறைவன் அருளால் முதல்வர் எம். ஜி. ஆர். ஆரோக்கியம் பெற்று வருகிறார். வளர்க வாழ்க என முதல்வரை வாழ்த்துகிறோம். பல்லாயிர மைல் தொலைவுக்கு அப்பால் சிகிச்சைப்பெற்று வருங்கால்பரிவும் பாசமும்கொண்ட வாக்காளப் பெருமக்களால் அபரிமிதமான வாக்களித்து ஒரு தலைவர் தேர்ந்து எடுக்கப்படுவதென்றால் மக்கள்பால் செல்வாக்கும் மரியாதையும் எந்த அளவில் இருந்திருக்கவேண்டும்? எல்லாம் இறைவன் திருவருள். பூரண குணமுற்று இறையருளால் நாட்டு மக்கட்கு நற்றொண்டு மேற்கொண்டு நல்ல பல செயல்களை ஆற்றவேணுமாய் ஞானசம்பந்தம் வாழ்த்துகிறது. திருவருள் துணைபுரிவதாக.

புதிய மத்திய மாநில அரசுகளை நாட்டிற்கு நற்பணி ஆற்றி உயர்த்திட வருக வளர்க என வாழ்த்தி வரவேற்கிறோம்.

மதச்சார்பற்ற அரசு

'மதச்சார்பு அற்ற' என்ற சொற்றொடர் பற்றி :

நம் அரசியல் சாசனத்தில் நம் நாடு 'மதச்சார்பற்ற அரசு' எனப் (Secular State) பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இச்சொற்றொடர் இருவிதமான விளக்கத்திற்கு ஆளாகிறது. 'மதச்சார்பற்ற' என்றால், மதத்தை விட்டு விட்ட என்ற பொருளும், யாதொரு குறிப்பிட்ட மதத்தினையும் சாராத என்ற பொருளும் கொள்ள இடமுண்டு. பொதுவுடைமை நாடுகள் மதச்சார்பற்றவைதான் – என்றாலும் நம் இந்திய நாட்டினை ஒத்த முறையில்

மதச்சார்பற்றநாடுகள் அல்ல அவையென்பது குறிப்பிடத்தக்கது. அந்நாடுகள் மதங்களைப் புறக்கணித்த நாடுகளாக - மதங்களை அகற்றிவிட்ட நாடுகளாக உள்ளன. பொதுவுடைமைநாடுகள் விஷயத்தில் 'மதச்சார்பற்ற' என்ற சொற்றொடர் 'நாத்திகப் போக்கு கொண்ட' என்ற வேற்றியல் பொருளையும் தந்து நிற்கிறது. ஓர் அதிசயம் என்னவென்றால் சில அகராதிகள் கூட இச்சொற்றொடருக்குச்சிலாக்கியம் இல்லாத சிறுமைப்பொருளைக் கூற முற்பட்டு விட்டன. அவை 'மதச்சார்பற்ற' (Secular) என்ற சொற்றொடருக்கு, 'நாத்திகச் சார்பான' (atheistic) என்ற பொருளை இயம்பியுள்ளன. சேம்பர்ஸ் (Chambers) என்ற பிரசித்தமான ஆங்கில அகராதி 'மதச்சார்பற்றநிலை, (Secularism) என்ற சொற்றொடருக்கு இயல்பான - சரியான - தெளிவான பொருளைத் தெரிந்துரைத்திருப்பது ஈண்டுக்கருதத்தக்கதாகும்.

"SECULARISM is the belief that the State, morals, education etc. should be independent of the Religion" (CHAMBERS TWENTIETH CENTURY DICTIONARY) 1983 Edition Page 1224)

"மதச்சார்பு அற்ற நிலை என்பது ஒரு குறிப்பிட்ட அரசு, ஆங்கு நிலவும் நெறிமுறைகள், கல்வி முதலியன சமயத்தைச் சாராமல் தனித்தியங்கும் கோட்பாட்டினை உடையதாகும்."

நம் அரசியல் சாசனம் நவில்வது :

நம் அரசியல் சாசனம் (ஜீவாதார) அடிப்படை உரிமைகளை (Fundamental Rights) ஏழுதலைப்பின் கீழ் வகுத்துக் காட்டி உரிமை வழங்குகிறது. அதில் ஒன்று மதசுதந்திரம் (Freedom of Religion) என்பதாகும். எல்லா மக்களுக்கும் மனச்சான்று சுதந்திரமும், தாராளமாகத் தத்தம் மதங்களை நடைமுறையில் கொள்ளவும், அனுட்டானப் படுத்தவும், பிரசாரம் செய்யவும் (Profess, Practise and Propagate) சமமான வாய்ப்பை வழங்குகிறது. எனவே மதச்சார்பற்ற அரசாங்கம்என்பது பாரதநாட்டுப் பண்பாட்டினைப் பாதுகாக்கும் முறையில் அமைந்துள்ளதே அன்றி, சமயங்களை ஒதுக்கும் நிலைக்கு ஒத்ததாக அமையவில்லை என்பது அறிந்து செயற்பட வேண்டுவது அரசின்கடமை.

"மதம் என்பது மக்களின் அறிவினை மயக்கும் அபினியாகும்" என்பது பொதுவுடைமை வாதிகளின் போதனை. இதுபொதுவுடைமை நாட்டின் அரசியல் சூழலுக்கும், வரலாற்று

வழிக்கும் பொருத்தமாக இருத்தல் கூடும் - ஆனால் ஆன்மீகத் துறையிலே ஏற்றமுற்ற நம் நாட்டுச் சூழலுக்கு எவ்வகையிலும் பொருத்தமாகாது. 'ஞானத்திலே பரமோனத்திலே உயர் மானத்திலே அன்னதானத்திலே, யாகத்திலே தவ வேகத் திலே-தனியோகத்திலே பல போகத்திலே, ஆகத்திலே தெய்வ பக்தி கொண்டார் தம் அருளினிலே உயர்நாடு' நமது நாடு எனத் தேசியக் கவிஞர் பாரதியார் பாராட்டுகிறார் - அழுத்தம் திருத்தமாக அறிவிக்கிறார்.

சரித்திரம் பகரும் சான்று :

நம் நாடு பிரிட்டிஷ்சாம்ராஜ்ய ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து விடுபடும் போது - பிரித்தாளும் கொள்கையுடைய பிரிட்டன், சமயச்சார்பை வைத்து பாக்கிஸ்தான் - இந்துஸ்தான் என இத்தியாவை இரண்டாகப் பிரித்து சுதந்திரம் வழங்கியது அறிந்த ஒன்றாகும். ஒருபகுதி முஸ்லீம்கள் பெரும்பான்மை யுள்ள பகுதி-முகமதியருக்குரிய பகுதி பாக்கிஸ்தானம். எஞ்சிய பகுதி இந்துக்கள் பெரும்பான்மையுள்ள பகுதி. ஜின்னா-காந்தி ஆகிய இருவரும் இருபெரும் மதத் தலைவர்களாகக் கருதப்பட்டு அவர்களுடன் கலந்துரையாடி இம்முடிவை பிரிட்டிஷ் ஏகாதி பத்தியம் ஏற்படுத்தியது. பாக்கிஸ்தான் வெள்ளையன் வகுத்த வழியிலேயேஏகியது. அவர்தம் நாட்டுப்பகுதி முஸ்லீம்களுக்கே உரிய நாடாக இருந்து வருகிறது. ஆனால் காந்தியடிகள் வழி இயங்கிவந்த காங்கிரஸ்கட்சி-நேருவைப் பிரதமராகக்கொண்ட அரசாங்கம், எஞ்சிய பகுதியை இந்தியர்கள் அனைவருக்கும் உரிய நாடாகவே வைத்து ஆட்சிபுரிந்துவருகிறது.

"எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள்"

பாரத அரசாங்கம் பாரதி காட்டிய பாதையைப் பின்பற்றிப் பாரத நாட்டை வழிநடத்திச் செல்வது பாராட்டப்பட வேண் டிய ஒன்றாகும். ஆனால்...

பெரும்பான்மை - சிறுபான்மை பிரச்னை :

இந்துக்கள் பெரும்பான்மைச் சமுதாயத்தாராக இங்கு - இந்தியாவில் வாழ்வது உலகறிந்ததோர் உண்மையாகும். கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள் முதலியோர் இங்குச் சிறுபான்மை யினர் தான். பெரும்பான்மை இந்துக்கள் பரிபூரணமாகத்

தத்தம் பண்பாட்டை, பழக்கவழக்கங்களை, (Customs and manners) நெறி முறைகளை மத ஆசாரங்களைப் பாதுகாத்துக் கொள்ள பாரதத்தில் பூரண உரிமை இருக்கவேண்டும். ஆனால் நடைமுறையில் இஃது எந்த அளவு இலங்குகிறது என்று பார்த்தால் இனிமையானதும், திருப்திகரமானதுமானதொரு நிலைமை நிலவவில்லை.

சிறுபான்மைச் சமுதாயத்தாருக்குப் பாதுகாப்பு அளிக்கப் படவேண்டுவது அவசியம்தான். இந்துக்களுக்கு அளிக்கப் படுவதுபோன்ற அத்தனை உரிமைகளும் இவர்களுக்கு வழங்கத் தடை இல்லை. ஆனால் தனிச்சலுகைகள் சிறுபான்மையாருக்குத் தருவதென்பது முறையன்று. காலக்கிரமத்தில் அது நாட்டின் ஐக்கியத்திற்கும் முன்னேற்றத்திற்கும் ஆக்கமளிப்பதாக அமையாது.

இந்நாட்டில் இந்துக்கள் – பெரும்பான்மையாக இருப்பதால் – அவர்களது நலம் அவசியம் காக்கப்படவேண்டும் – அவர்கள் துயர் அவசியம் நீக்கப்படவேண்டும். சிறுபான்மை மக்கட்குப் பாதுகாப்பு என்ற பெயரில் பெரும்பான்மை மக்களுக்குப் பரதவிப்பு வரப்பார்ப்பது சிறப்பாகாது – தருமம் ஆகாது – நியாயமும் ஆகாது ஆளும் கட்சிகள் இதனைத் தங்கள் நினைவில்கொண்டு ஆக்கபூர்வமான முறையில் ஆட்சி நடாத்தவேண்டுவது அவசியமாகும் – அவசரமும ஆகும்.

அரசியல் சாத்திரத்தில் ஓர் அறநெறியுண்டு. அரசாங்கத்தின் கடமை என்ன? அரசாங்கம் ஒரு நாட்டின் பெரும்பான்மை மக்களுக்குப் பேரளவு சுகத்தினைப் பெருக்கி உண்டாக்கக் கடமைப்பட்டது. (The greatest happiness to the greatest number) – இதுவே அரசியல் சாத்திரம் போடும் ஆணையாகும். எனவே எந்த அரசாங்கமும் பெரும்பான்மை மக்களின் நலத்திற்கும் – நல்வாழ்விற்கும், சுகத்திற்கும் – சுபிட்சத்திற்கும் பாதுகாப்பாக அமையவேண்டுவது கடமை ஆகும்.

இன்றையநிலை :

இந்துசமயத்தாரின் இன்றையநிலை எப்படி உள்ளது? இந்து சமயஸ்தாபனங்கள், திருமடாலயங்கள், அறநிறுவனங்கள், திருக்கோயில்கள் இன்று இருக்கும் நிலை இனிமையாக இல்லை என்பது யாவரும் அறிந்ததே. திருப்திகரமாகத்தென்படவில்லை. அரசாங்கம் இந்துசமய ஸ்தாபனங்கள்பால் ஆய்வுத்தனிக்கை

செய்யலாம் – ஆனல் ஆதிக்க ஆட்சி செய்யலாகாது. இந்து சமய ஸ்தாபனங்களின் சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப் படாமல் கண் காணிக்கலாமே அன்றி அரசாங்கம் அவற்றின் மேல் ஆக்கிரமிப்புசெய்வது முறையாகாது – அஃது அரசியல் சாசனத்திற்கு முரணனதாக முடியும். திருக்கோயில்களின் உரிமைப் பொருள்கள் திருக்கோயில்களுக்காக அவற்றின் வளர்ச்சிக்கும் வகைகளுக்கும் மட்டுமே செலவு செய்யப்பட வேண்டும். சமய ஸ்தாபனங்கள் சுதந்திரமாகச் செயல்பட முடியாத நிலையில் இன்று சட்டதிட்டங்கள் அமைந்துள்ளன. சமய ஸ்தாபனங்களின் வருவாய் வழிகள் சட்டங்களால் முடக்கப்பட்ட நிலையே முற்றிலும் காணப்படுகின்றது – இந்நிலை மாறவேண்டும். தெய்வங்களுக்குரிய வழிபாடுகள் திவ்வியமாக நடக்க வழிவகைகள் இல்லை என்ருல் அந்நிலை நாட்டுக்கு நல்லதல்ல – நமக்கும் நல்லது அல்ல – இறைவனின் சீற்றம், புயல், மழையின்மை, அகாலமழை, விபத்துக்கள் முதலிய வடிவிலே வருகின்றன என்பதை ஆட்சியாளர் ஆய்ந்தறிய வேண்டும். இன்று கண்கூடாகக் கண்டு கொண்டிருக்கிருேம். ஆட்சிப்பொறுப்பில் உள்ளவர் இதனைக் கண்டறியவேண்டும். நம் வணக்கத்திற்கும் வழிபாட்டிற்கும் உரிய ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் இத்தகைய சீரிய கருத்துக்களை வாய்ப்பு வரும் போதெல்லாம் வற்புறுத்தி வருவது அனைவரும் அறிந்த ஒன்றே.

மதச் சார்பற்ற அரசாங்கம் என்ற நிலையில் மதஸ்தாபனங் களுக்குக் குந்தகம் ஏற்படாமல் காக்கவேண்டுவது அவசியம் ஆகும். ஆட்சியாளர் தீர்க்கதரிசனத்தோடு இதனை உணர்ந்து ஆவன செய்ய வேண்டுவது இன்றியமையாத ஒன்ருகும். தெய்வத்திருவருள் துணைபுரிவதாகுக!

குருமணியின் அருள்மொழி

சமுதாயத் தொண்டு

ஒவ்வொருதுறையைச் சேர்ந்தவர்களும் சமுதாயத்தின் அங்கங்களாக இருந்து தங்கள் தங்கள் கடமைகளைச் செவ்வனே செய்வதன்மூலம் தாங்களும் வளர்ந்து நாட்டிற் கும் பயன்படுகிருர்கள். தங்கள் வருவாயை அடிப்படை யாகக்கொண்டே தொழில் செய்தாலும் அது சமுதாயத் திற்குப் பல நன்மைகள் விளைத்தலால் அறத்தின் அடிப் படையில்நிகழும் தொண்டுகளாகவே கருதத்தக்கனவாம்.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள்

திருச்சியில் நடைபெற்ற

விஸ்வ ஹிந்து பரிஷத் கூட்டத்தில்

வழங்கியருளிய

ஆசியுரை

8—7—1984

உலக நிலையில் சமயங்கள்

உலகம் தழுவிய நிலையில் பார்த்தால் இன்று ஆதிக்கம் செலுத்தும் சமயங்கள் கிறித்தவ சமயமும் இஸ்லாமிய சமயமும் தான்–பல நாடுகளில் கிறித்தவமும் இஸ்லாமியமும் வேருன்றிப் பெரும்பான்மை மக்களால் பின்பற்றப்படுகின்றன. அந்தவகையில் பார்த்தால் இந்துசமயம் ஒரு சிறுபான்மையினர் சமயமாகவே உள்ளது. இந்தியாவிலும் நேபாளத்திலும் தான் இந்து மதம் பெருபான்மை மக்களால் பின்பற்றப்படுகிறது இந்துக்கள் பல நாடுகளிலும் வசிக்கிருர்கள் என்ருலும் அவர்கள் ஆங்காங்கும் சமய உணர்வு மிகுந்த சமுதாயமாக மிளிரவில்லை. அமெரிக்காவில் சைவ சித்தாந்தத் திருச்சபையை (Saiva Siddhanta Church) நிறுவியுள்ள ஹவாய் நாட்டைச் சேர்ந்த சிவாயசுப்பிரமணிய சுவாமிகள் கூறுகிருர்: "அமெரிக்க நாட்டில் வாழும் அருமை ஹிந்து மக்களுக்குச் சமய உணர்வு அறவே கிடையாது என்று துணிந்து கூறலாம். அவர்கள் பொருளாதாரத்துறையில் காட்டும் ஆர்வத்தைச் சமயத்துறையில் காட்டுவதில்லை. உறுதியாக இந்து சமயத்தில் ஊக்கம் காட்டி வாழ வேண்டும்" என அறிவுறுத்துகிருர். (Stand Strong in Hinduism) இத்தொண்டினைப் பொதுவாக இந்தியாவின் சமயநிறுவனங்களும் சிறப்பாக உலகு தழுவிய விஸ்வ ஹிந்து பரிஷத்தும் மேற்கொள்ள வேண்டும்.

இந்து சமயநிலை :

இந்தியாவில் பெரும்பான்மைமக்கள் இந்துக்களே என்ற லும் கிறித்தவ, இஸ்லாமிய சமயங்கள் சிற்சில பகுதிகளில் பரவி வேரூன்றி உள்ளன. இந்தியாவின் வடப்பகுதியில் கோடிக் கணக்கில் இஸ்லாமியர் வாழ்ந்து வருகின்றனர். தெற்குப்பகுதி கேரளமாநிலத்தில் சிலபகுதிகளிலும், தமிழகத்தில் திருநெல் வேலி – பாளையங்கோட்டைப் பகுதிகளிலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் கிறித்தவ சமயத்தவர் மேலோங்கி உள்ளனர். மக்களின் அறியாமையையும் வறுமையையும் பயன்படுத்தியே இந்துக்கள் கிறித்தவசமயத்திற்கு மதமாற்றம்செய்யப்பட்டுள்ள னர் என்பது குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும். வட இந்தியா வும் தமிழகத்தின் வடபகுதியும் இஸ்லாமிய சமயத்தாரின் படையெடுப்புகட்குமிகுதியும் ஆட்பட்டிருந்தன. கஜனிமுகமது, கோரி முகமது, செங்கிஸ்கான் போன்ற இஸ்லாமிய மன்னர்கள் வட இந்தியப் பகுதிகள்மேல் படையெடுத்தமைக்குச் சரித்திரம் சான்று பகர்கின்றது. இஸ்லமிய மன்னர்களின் வன்முறைச் செயலுக்கு, அப்பகுதிக்கோயில்களில் உள்ள உடைந்த சிலை களே தக்க சான்று பகர்ந்து நிற்பதைக் காண்கிறோம் இந்தி யாவில் இந்துசமயமே புராதன சமயமாக பிரதான சமயமாகத் திகழ்ந்தபோதிலும் இஸ்லாமியமும் கிறித்தவமும் வன்முறை யிலோ இங்குள்ள வறுமை அறியாமையைப் பயன்படுத்தியோ வந்து புகுந்தவை என்பதற்குச் சரித்திரம் சான்று பகர்கின்றது.

பிரிட்டிஷ் ஆட்சிக்காலம் :

கிழக்கு இந்தியக் கம்பெனியின் ஆட்சிக்காலத்தில் கி. பி. 1840 லிருந்து 1854 வரை கோயில்கள் அவர்கள் வசம் இருந்தன. விக்டோரியா மகாராணியார் காலத்தில் 1854 ஆம் ஆண்டு மீண்டும் அவை உரியவர்கள் வசமே ஒப்புவிக்கப்பட்டு விட்டன. இதற்குக் காரணம் பிரிட்டிஷ் ஆட்சியாளர் தாங்கள் மதத்துறையில் தலையிடுவதில்லை என்பதாகவே கூறப்பட்டது. ஆனல் உண்மையில் அது காரணமல்ல. 14 ஆண்டுக்காலத்தில் வெள்ளைக்காரக் கலெக்டர்கள், மேல்நிலை அதிகாரிகள் முதலி யோர் இந்து சமயத்தின் அருமை பெருமைகளையும் அதன் தெய்வ நல அருளிப்பாடுகளையும் அறிந்து இந்து சமயத்தில் ஈடுபாடு கொள்ளத் தொடங்கினர். அதிகாரிகள் பலரும் தாமாகவே பல கட்டளைகளை நிறுவினர். திருப்பணிகள் பல புரிந்தனர். தலங்களில் பிரார்த்தனைகள் நிகழ்த்தினர். இப்படியே போய்க்கொண்டிருந்தால் இந்துமதம் வளரும். கிறித்தவம் பரவாது. இத்தகைய நிலையைப்பற்றிக் கிறித்தவ மதத்தினைப்

பரப்பவந்த பாதிரிமார்கள் அன்றைய அரசாங்கத்திற்கு அதாவது விக்டோரியாமகாராணிக்கு எழுதிய கடிதங்கள் காரணமாகவும், தூதுக்குழு சென்று வற்புறுத்தியதன் காரணமாகவும் தான் கம்பெனியார்வசம் இருந்த கோயில்கள் மீண்டும் அதன் அதன் உரிமையாளர்வசமே ஒப்புவிக்கப்பட்டன.

ஆங்கிலேயரை ஆண்ட அருளிச்செயல்கள் :

மதுரை மாவட்டக் கலெக்டர் அலுவலகக் கட்டிடத்தில் தங்கியிருந்தார். அப்போது திடீரென அவர் முன்னால் ஒரு சிறுமி தோன்றி உடனே அக்கட்டிடத்திலிருந்து வெளியே வா என அழைத்தாள். கலெக்டர் வெளியேறிய அக்கணமே அக்கட்டிடம் இடிந்து விழுந்தது. சிறுமி மறைந்தாள். மீனாட்சியம்மன் கோயில் அவருக்குக் காட்சிதந்தது. கலெக்டர் தன்னை அழைத்தது மீனாட்சி அம்மையே என அறிந்தார். இறுதியில் அவர் விருப்பப்படியே அவரது கல்லறையும் அங்கேயே நிறுவப்பட்டது.

மதுராந்தகத்திலுள்ள மிகப்பெரிய ஏரி ஆண்டு தோறும் உடைப்பெடுத்துச் சேதம் விளைவித்து வந்தது. செங்கல்பட்டு கலெக்டர் துரை அங்குள்ள இராமபிரானிடம் பிரார்த்தனை செய்துகொண்டார். அவ்வாண்டு ஏரி உடைபடவில்லை. அந்தக் கலெக்டர் பக்தியோடு அத்திருக் கோயிலில் மண்டபம் ஒன்று கட்டிவைத்தார். இன்றும் அக்கோயில் ஏரி காத்த இராமன் கோயில் என்ற பெயரில் இருந்துவருகிறது.

ஹைட்துரை என்பவர் விருத்தாசலம் கோயிலில் கைலாசப் பிரகாரம் நான்கு புறமும் கருங்கல் தளத்தில் திருப்பணி புரிந்துள்ளதை இன்றும் காணலாம்.

பவானி திருக்கோயிலில் வெள்ளைக் காரத்துரை யானை தந்தத்தினால் பள்ளியறை மஞ்சம் அமைத்துத் தந்துள்ளார். இவையாவும் உண்மையில் நிகழ்ந்தனவே ஆகும். மாவட்ட கெஜட்டுகளில் இன்றும் இவ்விவரங்கள் காணக்கிடக்கின்றன.

இந்து அறநிலையப் பாதுகாப்புக் கழகம் :

இந்துசமயத்தின் சிறப்பைப்பற்றி இந்துக்களே தெரியாமல் உறங்குகின்றனர். தங்கள் மதத்தை வளர்ப்பதில் ஈடுபடாமல் இருக்கின்றனர். டாக்டர் சர். ஏ இராமசாமிமுதலியார் வெளிநாட்டுக் போயிருந்தபோதுபழைய புத்தகக்கடையைப் பார்வையிட்டார். அதில் ஒரு புத்தகத்தை வாங்கிப் படித்தார். அப்புத்தகத்தில் மேலே குறிப்பிடப்பட்ட தெய்வநல அருளிச்செயல்களும் அவைகாரணமாக அரசு அதிகாரிகளாகிய கிறித்தவர்கள்

பலரும் இந்துமத அபிமானிகளாகித் திருப்பணிகள் செய்து வருவதையும், இவற்றால் கிறித்தவ சமய வளர்ச்சிக்குன்றி வருவதையும் பாதிரிமார்கள் இங்கிலாந்திலுள்ள மகாராணியார்க்கு அறிவித்ததையும், அதுகாரணமாகவே இந்துக்களிடம் இருந்து எடுக்கப்பட்ட கோயில்களை அவரவர்களிடமேவிட்டுவிட்டால் இந்து சமய வளர்ச்சி குன்றும், இந்துக்கள் உறங்குவார்கள், கிறித்தவர்கள் தங்கள் சமயத்தை இந்து மக்களிடையே பரவச் செய்வது சுலபமாகும் என்ற குறிப்புக்கள் அடங்கியிருக்கக் கண்டார். அவரே 1965 – 68 திருவரங்கத் திருப்பணிக்கமிட்டிக் கூட்டம் அறநிலைய இலாகா அலுவலகக்கட்டிடத்தில் நடைபெற்றபோது இதைப்பற்றிக் குறிப்பிட்டுப்பேசினர். நீதிக்கட்சி ஆட்சிசெய்தபோது பனகல் ராஜாகாலத்தில்தான் இந்து அறநிலையப் பாதுகாப்புக் கழகம் உருவாக்கப்பட்டது. பின்னர் அதுவே 1953–ல் இந்து அறநிலையப் பாதுகாப்பு இலாகாவாக உருமாறியது.

இன்றைய நிலையில் இந்து அறநிலையப் பாதுகாப்பு இலாகா இந்துசமய வளர்ச்சிக்குப் போதுமான ஆக்கம் தேடுவதாகச் சொல்லஇயலாது. எதிர்பார்த்த பலன் ஏற்படுவதாகஇல்லை. அறநிலையங்களில்ஈடுபட்டுள்ள அரசியல்தலைவர்களாக சட்டமன்ற உறுப்பினர்களாகஉள்ளவர்களும் பொதுமக்களும் இந்நிலையை அரசாங்கத்தாருக்குத் தூதுக்குழு மூலம் தெரிவிக்க வேண்டும்.

தன்னாட்சிக் குழு தேவை :

இந்து அறநிலையம் தன்னாட்சி உரிமை படைத்த ஒருவாரியமாக (autonomous body) மாற்றி அமைக்கப்பட வேண்டும். இந்து சமயத்தைக் காக்க ஏற்றதோர் சாதனமாக அது செயல் பட வேண்டும். அதனிடம் சகல அதிகாரங்களும் ஒப்புவிக்கப் படவேண்டும்.

அறநிலையங்கள், திருக்கோயில்கள், திருமடங்கள் ஆகியவற்றின் சொத்துக்களுக்கு உரிய வருமானம் வருமாறு செய்ய வேண்டும். வருவாய்த்தடைச் சட்டங்களை அகற்ற அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். அறநிலையங்களின் சொத்துக்களைப் பிற துறைச் செலவுவகைக்குப் பயன்படுத்தலாகாது. சம்பந்தப்பட்டவர்கள் இதனை அரசுக்கு அறிவித்து ஆக்கரீதியான வழிகாணவேண்டும். திருக்கோயில் பணிகளை எல்லாம் திறம்படவும் ஒழுங்காகவும் நிறைவேற்றப் பட வேண்டும். இச்செயல்கள் இனிது நடைபெறவும், விஸ்வ ஹிந்து பரிஷத்போன்ற அமைப்புக்கள் அரசுக்கு அறிவுறுத்தி ஆவனசெய்யவும் எல்லோரும் இன்புற்று வாழவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

தருமையாதீனத்தில் நடைபெற்ற
அனைத்துலக சைவசித்தாந்தக் கருத்தரங்கின்போது
சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தைத்
தமிழகச் சட்டசபை சபாநாயகர்
மாண்புமிகு க. ராசாராம் அவர்கள்
தொடங்கிவைத்து ஆற்றிய

பேருரை

கடந்த இரண்டு தினங்களாக நடைபெற்று இன்றும்தொடரும் முதலாவது அனைத்துலகசைவ சித்தாந்த முதல் கருத்தரங்கில் பங்குகொண்டு சிறப்புச்செய்த அறிஞர் பெருமக்களே! தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம அவர்களே! தருமை ஆதீனத்துடன் இவ்விழாவை இணைந்து நடத்தும் பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணை வேந்தர் அருமைநண்பர் மணிசுந்தரம் அவர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! நண்பர்களே! அனைவருக்கும் முதற்கண் வணக்கம்.

உலகில் உள்ள உயிர்கள் அனைத்தும் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் தேடி அலைகின்றன. இம் மூன்றுடன் ஓர் உயிரின் தேவை முடிந்து விடுவதில்லை. இவ்வுலகில் தோன்றிய அனைத்து உயிர்களுக்குமே இன்பம் என்பது விரும்பப்படும் பொருளாக உள்ளது. தொல்காப்பியனாரும் இதனை "இன்பம் என்பதுதான் அமர்ந்து மேவற்றாகும்" என்று குறிப்பிடுவர். எனவே இன்ப நாட்டம் என்பது உயிர்களின்பொதுவியற்கை என்பதுபுலனாகின்றது. இவ்வின்பத்தைச் சிற்றின்பம், பேரின்பம் என இரண்டாகப் பகுத்து வழங்குவர். உலகத்திலுள்ள பொருள்களினால் அனுபவிக்கப்படுவதும் மாறுபட்ட தன்மையுடையது 'சிற்றின்பம்' என்று செப்பப்படும். இவ்வுலகப் பற்றைவிட்டு இறைவனுடைய திருவடியை அடைவதே பேரின்பம் என்று பெரியோர் கூறினர். சிற்றின்பம் இன்பம் போல் தோன்றி முடிவில் துன்பத்தையே தரும் இயல்

புடையது என்றும், பேரின்பம் உண்மையான உறுதி இன்பத்தைக் கொடுப்பது என்றும், அப்பேரின்பத்தை அடைவதற்குரிய வழிகளை அமைத்துக் கொடுப்பது சமயம் என்றும் கொண்டனர். உலகத்தையும் உயிர்களையும் படைத்துக் காத்து அழித்து மறைத்து அருள்புரியும் இறைவனைச் சிவம் அல்லது பதி என்றும், உயிர்களைப் பசுக்கள் என்றும், பசுக்கள் பதியை அடையத் தடையாக இருக்கும் உலகப் பற்றைப் பாசம் என்றும், இப்பதி, பசு, பாசம் ஆகிய மூன்றும் உண்மைப் பொருள்கள் என்றும் பழந்தமிழர் கண்டனர். பதி, பசு, பாசம் எனச் சொல்லப்படும் மூன்றும் முப்பொருள் உண்மைகள் என்று சொல்லப்படும். முப்பொருள் உண்மைகளை அடிப்படையாக வைத்துச் சைவ சமய நூல்களாகிய திருமுறைகளையும் சித்தாந்த சாத்திரங்களையும் அருளாளர்கள் இயற்றியுள்ளனர். திருமூலர் திருமந்திரத்தில்,

"பதிபசுபாசம் எனப் பகர் மூன்றில்
பதியினைப்போல் பசுபாசம் அனாதி"

என்று உண்மைநெறி, வாழ்க்கை நெறி விளக்கப்பட்டிருக்கக் காணலாம். உயிர்கள் தமக்கே இயல்பாகவுடைய பாசத்தை நீக்கி, இறைவனுயை திருவடிப்பேற்றை அடைவதற்கு அன்பு நெறியைக் கடைப்பிடிக்க வேண்டும். உலகத்தில் உறையும் உயிர்கள் எல்லாம் ஒரே குலம் என்ற உணர்வுடன் ஒற்றுமையாகச் சமாதானத்துடனும் அன்புடனும் வாழ வேண்டுமென்று வற்புறுத்துவது சைவ சமயமே. 'சிவம்' என்ற சொல்லிற்கே அன்பு, இன்பம், ஆனந்தம் என்று பொருள் விரிப்பர் நம் முன்னோர். "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்பது திருமூலர் திருவாக்கு. மேலும் திருமூலர்,

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"

என்றும் குறிப்பிடக் காணலாம்.

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்பர் அறிவிற் சிறந்த ஔவையார். "எண்ணரிய பிறவிதனில் மானிடப்பிறவிதான் யாதினும் அரிது அரிது" என்றும் கூறுவர். இவ்வாறு மானிடப் பிறவியின் அருமையினைப் பலரும் அறிந்திருந்தாலும் ஒரு சிலரே மானிடப் பிறவியின் பயனைத் துய்ப்பவர் என்று சொல்லலாம்.

" மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக்காயம்
ஆனிடத்தஞ்சுமாடும் அரன்பணிக்காகவன்றே
வானிடத்தவரும் மண்மேல்வந்து அரன்தனை அர்ச்சிப்பர் "

என்பது அருணந்தி சிவத்தின் வாக்கு. சிவசம்பந்தம் பெற்றுச் சிவசிந்தனையுடன் திருமுறைகள் ஓதியுணர்ந்து சிவ வழிபாடு செய்து அன்போடியைந்த வாழ்க்கை நடத்துபவர்களே உண்மைச் சைவர்கள் ஆவர்.

" பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் "

என்பது குறள். எனவே பிறப்பால் சிறப்பில்லை. வாழும் வகையால்தான் சிறப்பு வந்து சேருகின்றது என்பது திருவள்ளுவர் காட்டும் செந்நெறியாகும். மேலும் அவரே உலக நூல்களிலெல்லாம் சொல்லப்பட்டுள்ள சாரமான கருத்து யாது எனில் ஒருவர் தமக்குக் கிடைத்த பொருளில் ஒரு பகுதியைப் பிறரோடு பகிர்ந்து உண்ணுவதாகும் என்பர்.

" பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாம் தலை "

மேலும் தாம் வாழும் இவ்வுலகத்திலேயே பசித்து வந்தவர் துன்பம் தீர அவரைப்புசிக்கச்செய்து அனுப்புவதே புண்ணியம் என்றும் அவ்வாறுபசித்துவந்தவரின்துன்பம்துடைப்பதேபரமன் அருள்பெற உதவும் நன்னெறி என்றும் திருமூலர் குறிப்பிடுவர்.

" படமாடுங் கோயில் பரமற் கொன்றீயில்
நடமாடுங் கோயில் நம்பர்க் கொன்றாகா
நடமாடுங் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடுங் கோயில் பரமர்க் கங்காகும் "

இத்திருமந்திரப் பாடல் இறைவனுக்கெனப் பூசையொன்றுற்றில் அது எளியவனைப் போய்ச்சேராது; ஆனால் அதே நேரத்தில் வாழ்க்கையில் அவதிப்பட்டு அல்லற்பட்டு நிற்போருக்கு ஒன்று தந்தால் அஃது இறைவனைப் போய்ச்சேரும் என்கிறது. மேலும் அதனையே இறைவன்பெறவிருப்புடன்ஏற்றுக் கொள்கிறான் என்றும் அரியபலகருத்துகளைப் புலப்படுத்திநிற்கக் காணலாம். இதனையே புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களும், " பசி என்று வந்தவர்க்குப்புசி என்று ஒருபிடி கொடுத்துப்பாரப்பா " என்றார். மேலும் திருமந்திரம் மனிதன் இவ்வுலகில் ஆற்றவேண்டிய அருஞ்செயல்களைப் பின்வருமாறு கூறுகின்றது.

" யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கோர் இன்னுரைதானே."

இறைவன் அன்பைப் பெற அன்புடன் அவன் திருவடிகளில் ஒரு பச்சிலையிட்டு அருச்சித்தாலே போதும்; அதுபோல் வாயற்ற ஜீவன் என்று பேசப்படும் பசுவிற்குச் சிறிது புல் எடுத்துப் போட்டாலே போதும்; தன்னோடொத்த மனித இனத்திற்குத் தான் உண்ணும்போது ஒருபிடி சோறுதந்து ஆதரித்தாற் போதும்; பிறரோடு பேசும்போது இன்முகம் காட்டி இன்னுரை வழங்கினாற் போதும்; இவையே வாழ்வின் பெரு நெறிகள் என்று வெளிப்படையாகச் சொல்கிறார் திருமூலர்.

இத்தகைய சீரிய வாழ்க்கைநெறியினை வற்புறுத்தும் சமயம் சைவ சமயமாகும். 'சமயம்' என்ற சொல் 'பக்குவப்படுத்துதல்' என்ற பொருள் தந்து நிற்கும். ஒரு மனிதனைப் பக்குவப்படுத்துவது சமயம் ஆகும். இச்சமயம் மிகமிகத் தொன்மை வாய்ந்தது. கற்கால நாகரிகத்திலேயே இலிங்கவழிபாடு இடம்பெற்றுள்ளது. "புதிய கற்காலப் பொருள்களுள் இலிங்கத்தைக் குறிக்கும்கற்களும் கிடைத்துள்ளன." சிவபெருமான் மலைவாழ் கடவுள்; யானைத்தோலையும், புலித்தோலையும் உடையவர். அவர் விலங்குகளுக்குத் தலைவர் என்றும் பொருள்படப் "பசுபதி" என்னும் பெயரால் அழைக்கப்படுகிறார். இவற்றையும் அவரைப் பற்றிய கதைகளையும் நோக்க - அவர் மலைமகள் கணவர் என்பதையும் நோக்க - அக்கடவுள் பழைய கற்காலத்திலும் புதிய கற்காலத்திலும் மக்களால் வழிபடப்பெற்று வந்தவராவர் என்று ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுவதாக வரலாற்றறிஞர் பி. டி. சீனிவாச ஐயங்கார் அவர்கள் " The Stone Age in India " என்னும் தம் நூலிற் குறிப்பிடுகின்றார்.

சுமேரிய நாகரிகம் சிறப்புற்றிருந்த காலத்திலேயே, நம் இந்தியாவில் சிந்துவெளியில் மிகச் சிறந்த நாகரிகம் விளங்கியிருந்தது என்பது, புதைப்பொருள் ஆராய்ச்சியால் புலப்பட்ட உண்மையாகும். சிந்துவெளியில்கிடைத்த முத்திரையொன்றில், சிவன் பசுபதி என்பதை உணர்த்தும் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. மேலும் அங்கு இலிங்கங்கள் கிடைத்துள்ளன. சிந்துவெளி நாகரிகம், வேதகால ஆரியநாகரிகத்திற்கு முற்பட்டது. எனவே, இந்தியாவில் ஆரியர் வருகைக்கு முன்னரே இலிங்க வணக்கம் இருந்தது என்பது தெளிவாகின்றது. இப்புதைப் பொருள்களைக்கண்ட ஆராய்ச்சி அறிஞர் சர் ஜான் மார்ஷல்,

“சிந்து வெளியிற் கிடைத்த புதுமைகளுள் முதலிடம் பெறத் தக்கது சைவத்தின் பழைமையேயாகும். அது மாக்கள் காலம் அல்லது அதிலும் முற்பட்ட காலத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறது. இன்றளவும் வழக்கிலுள்ள மிகப் பழைய சமயமாக இது விளங்குகிறது” என்று வியந்து கூறியுள்ளனர்.

சங்ககாலத்தில் சைவ சமயம் :

தமிழன் பொற்காலம் எனப் போற்றப்படுவது சங்க காலமாகும். சங்க காலத்தெழுந்த தொகை நூல்களிலேயே சிவனைப் பற்றிய குறிப்புகள் உண்டு. அகநானூறு, புறநானூறு சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய அனைத்து நூல்களிலும் சிவனைப்பற்றிய குறிப்புகள் நிறைய உள்ளன. பாடல்களை விடுத்து சமயத்திற்கு வருவோம்.

சிவன் குறிக்கப்பெறுவதை அகநானூறு காட்டும்

ஞாலம் நாளும் நலங்கெழு நல்லிசை
நான்மறை முதுநூல் முக்கட் செல்வன்
ஆல முற்றம் கவின்பெறத் தைஇய
பொய்கை சூழ்ந்த பொழின்மனை மகளிர்.

(அகநானூறு : 181.)

புறநானூற்றிலும் ‘ஆலமர் கடவுள்’ என்று சிவன் குறிக்கப் பெறுதலைக் காணலாம்.

ஆலமர் கடவுள் அன்னநின் செல்வம்
வேல்கெழு குரிசில் கண்டேன் ஆகலின்

(புறநானூறு : 198)

மதுரைக் காஞ்சியில், ஐம்பெரும்பூதங்களை ஆக்கி அவற்றுடன் தானும் கலந்து, அலகிலா விளையாடலைச் சிவன் புரிகிறான் எனக்குறிப்பிடும்.

நீரும் நிலனும் தீயும் வளியும்
மாக விசும்பொரு ஐந்துடன் இயற்றிய
மழுவாள் நெடியோன் தலைவனாக.

(மதுரைக்காஞ்சி : 453-455)

தமிழன் முதற்காப்பியமாம் சிலப்பதிகாரத்திலும் சிவனே முதன்மைதரப் பெற்று முதற்கண் குறிப்பிடப் பெற்றிருக்கக் காணலாம்.

(தொடரும்)

இதழ்வழிச் சமயப் பயிற்சித் திட்டம்

1985 – 86

[இந்த இதழ் அட்டைக் கடைசிப் பக்கத்தில் "இதழ் வழிச் சமயப் பயிற்சி" பற்றிய அறிக்கை இடம் பெற்றுள்ளது. முதலாண்டுக்குள்ள பொதுப்பாடத் திட்டம் கீழே தரப்படுகிறது.]

1 வேதம் — நான்கு வேதங்கள் – ஆறு அங்கங்கள்.

2 உபநிடதம் — தச உபநிடதம் பொது விளக்கம்.

3 ஆகமங்கள் — பொதுவாகச் சைவ வைணவ சாக்த ஆகமங்களின் விளக்கம்.

4 சைவசமயப் பிரிவுகள் — பாசுபதம், காபாலிகம், மாவிரதம், காளாமுகம், கோளகிசந்தானம், வீரசைவம், காஷ்மீர சைவ விளக்கங்கள்.

5 சித்தாந்த சைவம் — சைவசமயப் பிரிவுகளில் சித்தாந்த சைவம் ஏனைய சமயங்களில் வேறுபட்டு விளங்கும் நிலைகளைக்காட்டுதல்.

6 வைணவம் — பாஞ்சராத்திரம், வைகானசம் கோட்பாடுகள், வடகலைத்தென்கலைப்பிரிவுகள், திவ்யப்பிரபந்தம்.

7 மற்றைய சமயங்கள் — சாக்தம், காணபத்யம், கௌமாரம், சௌரம்.

8 புராணங்கள் — பதினெண்புராணங்களின் கருத்துக்களை விளக்குதல்.

9 திருமுறைகள் — பன்னிரு திருமுறைகளிலும் இறையோடும் கடவுட்கொள்கையினையும் நாயன்மார்களின் அருட்செயல்களையும் விளக்குதல்.

10 சித்தாந்த சாத்திரங்கள் — சிவஞானபோதம் சிவஞான சித்தியார் முதலிய பதினான்கு நூல்களையும் விளக்குதல்.

11 பண்டார சாத்திரம் — தருமையாதீனக் குருமுதல்வர்கள் அருளிய ஞானநூல்களின் கருத்துக்களை விளக்குதல்.

12 திருக்கோயில்கள் — கட்டிடம், படிமம், கலைகள், வழிபாட்டு முறைகள் இவற்றின் விளக்கம்.

வரவேற்பியற் கவிதை மலர்

'சித்தாந்தப் புலவர்மணி'

திரு. ந. ரா. முருகவேள், M. A., M. O. L.

ஆசிரியர் : 'திருக்கோயில்', சென்னை – 34.

[நம் வணக்கத்திற்கும் வழிபாட்டிற்குமுரிய ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் கால்நூற்றாண்டுக்காலத் திற்கு முன் – 1960 ஆம் ஆண்டில் தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபையின் 76 ஆம் ஆண்டு விழாவிற்குத் தலைமைதாங்கி அருளினார்கள். அப்போது அவர்களது திருநாமம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் என்பதைச் சைவ உலகம் அறியும். சென்னைப் பிரசார நிலையத்தில் அப்போது பணி ஆற்றிவந்த ஸ்ரீலஸ்ரீ சந்நிதானம் அவர்களின் திருத்தொண்டின் சிறப்பினைத் தூத்துக்குடிச்சபையார் பாராட்டிப் போற்றிப் பாமாலை யால் வரவேற்றுச் சிறப்பித்தனர். பாமாலை 'சித்தாந்தப் புலவர்மணி' திரு. ந. ரா. முருகவேள் M. A., M. O. L. அவர்களால் ஆக்கப்பெற்றது. அன்பர்கள் படித்து இன்புற இங்கே வழங்கப்படுகிறது.]

செந்தமிழும் சிவநெறியும் செழித்துயரப்
பல்வகையிற் சிறந்த தொண்டு
சந்தமுறச் செய்துவரும் **தருமபுர**
ஆதீனம் சார்ந்து, **சோம**
சுந்தரநற் றம்பிரான் சுவாமிகள்என
யாங்களெல்லாம் துதித்துப் போற்றிச்,
சிந்தைமகிழ் கொளவிளங்கும் சீரியோய்!
நின்வருகை சிறப்ப தாக! 1

சைவநெறி தழைத்தொளிரத், தமிழ்மொழிதான்
சிறப்பெய்தித் தலைமை ஓங்க,
உய்யுநெறி மக்களெலாம் உணர்ந்தொழுகப்
பலபணிகள் உஞற்றும் நல்லோய்!
துய்யஅருட் பெருஞ்சோம சுந்தரத்தம்
பிரான் அடிகள்! தூழ்ந்த அன்பின்
மெய்யின்றுமை வரவேற்று, மிகமகிழ்கேம்!
நின்தொண்டு விளங்கி வெல்க! 2

அருமைமிகு பெரும்புலவர் அருட்குமர
குருபரநல் அடிகள் போன்ற,
பெருமைமிகு பலசான்றோர் பேணிமிகப்
போற்றியுய்ந்த, பெருமை சான்ற
தருமபுரம் சார்ந்துநிற்கும் தவமணியே!
தமிழ்ச்சைவச் சான்றேய்! நும்மை
இருமலர்த்தாள் பணிந்தன்பின் வரவேற்றும்!
நும்வருகை இனிதே யாக! 3

நன்மைபெரு கருள்நெறியாம் நற்சைவ
சித்தாந்த நலங்கள் போற்றும்
தொன்மைமிகும் அமைப்புகளுள் தூத்துக்
குடிச்சபையே தொன்மை வாய்ந்து,
சின்மயராம் பெருஞ்சிறப்பின் சிவகுருநா
தப்பெரியார் சிறந்த தொண்டால்,
மன்னிவரும்; மாண்புயர்நும் வருகையினல்,
மேலும்இது மாட்சி ஓங்கும்! 4

தன்னேரில் சிறப்புடைய தருமபுர
ஆதீனம் சார்ந்து நின்று,
முன்னுளில் மிகப்பலரே முனிவரர்கள்
மொழிசமயம் முனைந்து காத்தார்!
இந்நாளின் நிலையறிந்தே, எழிற்கயிலைக்
குருமணிதன் எண்ணம் தேர்ந்து,
சென்னையினில் நீர்புரியும் திருத்தொண்டு
பெரிதுமிகச் சிறந்த தொன்றும்! 5

சிவநெறியின் தவவிளக்கே! செந்தண்மைப்
பண்புமிகச் சிறந்த தோன்றல்!
உவகைமிக நினைவரவேற் றுள்ளமிக
மகிழ்கின்றேம்! உயர்ந்தோய்! நீதான்
எவருமிகப் புகழ்தரும்எம் எழில்தூத்துக்
குடிச்சபையின் எழுபத் தாறும்
நவையறுசீர் ஆண்டுவிழா நற்றலைமை
தாங்கவந்தாய்! வருக நன்றே! 6

சொல்லரிய புகழ்ச்சோம சுந்தரநா
யகர்முதலாம் தூய சான்றோர்,
நல்லறிஞர் பற்பலர்தாம் நன்குமிகக்
கலந்தொன்றி நயந்து நின்று,
பல்வகையில் தமிழ்ச்சைவப் பணிபுரிந்த
எம்சபையின் பணிகள் ஓங்க,
எல்லையில்சீர்ச் சுவாமிகள்நீர் எழுந்தருளிப்
போந்த(து), எமக் கினிய பேறும்! 7

செந்தமிழ்க்கும் சிவநெறிக்கும் சிறந்தபல
தொண்டாற்றும் செம்ம லாக
நந்தமுயர் திருப்புலிசை ஞானியார்
அடிகளார் நனிதி கழ்ந்தார்!
அந்தமில்சீர் அப்பர்என வைகிநின்ற
அவர்க்குப்பின், அரிய ஞான
சம்பந்தர் போன்றிவண்நீர், தமிழ்சைவம்
தழைப்பிக்கத் தகவே போந்தீர்! 8

“ஞாலமெலாம் சிவநெறியே நனிபரவல்
வேண்டும்”என நயப்புற் றன்பால்
சீலமிகும் உயர்காழித் திருஞான
சம்பந்தர் தெரித்துச் சென்றார்!
சாலமிக அவர்விருப்பம் தக்காங்கு
நிறைவேறச் சான்றோய்! நீதான்
ஏலமிகப் பெருந்தொண்டிங் கியற்றுகின்றாய்!
நின்வரவால் இன்பம் கொள்கேம்! 9

நன்குயர்ந்த பெருஞ்சிறப்பின் நலஞ்சிறந்த
சுவாமிகள்நீர், நயக்கப் போந்தே
எங்களரும் பெருஞ்சபையின் இனியவிழாச்
சிறப்பித்தீர்: எங்கள் நன்றி!
தங்களுயர் நல்வரவால், தமிழ்ச்சைவப்
பணிபுரிஎம் சபைமேன் மேலும்
இங்குமிக உயர்ந்தோங்கும்! இதில்ஐயம்
சிறிதுமில்லை! இனிது வாழி! 10

அறுகம் புல்

[வைத்திய இரத்தினம் திரு. க. ச. முருகேச முதலியார் அவர்கள், சென்னை இறையாட்சி இந்திய மருத்துவக் கலாசாலை, சித்தமருத்துவத் தலைமை ஆசிரியராகப் பணியாற்றியவர்கள். அவரது நூலான 'பொருட்பண்பு நூலபயிர் வகுப்பு—குணபாடம்' (Materia Madica) முதற் பாகத்திலிருந்து அறுகம்புல் பற்றிய இக் கட்டுரை தொகுக்கப்பட்டது. இரண்டாம் பதிப்பு 1952. தொகுத்தவர்: "செந்தில் குமரன்"]

அறுகம்புல் பதம், முதண்டம், தூர்வை, மேகரி என்ற பெயர்களாலும் அறியப்படும். இதற்குள்ள தாவர இயல் பெயர் (botanical name) Cynodon Dacylon என்பதாகும். இஃது எங்கும் கிடைக்கக் கூடிய புல் வகையைச் சேர்ந்தது. இதன் புல்லும் வேரும் மருத்துவ மகிமை கொண்டன. இதன் செய்கைகள் வரட்சி அகற்றவல்லது; துவர்ப்பினை உண்டாக்கக் கூடியது; குருதிப்போக்கை அடக்குவதும், சிறுநீர்பெருக்குவதும் அறுகம் புல்லிடம் உள்ள குணங்கள் ஆகும்.

அறுகம்புல்லின் ஊறல் நீரும், பாலும் சேர்த்து உட்கொண்டால் கண்நோய், தலைநோய், கண்புகைதல், குருதி அழல் ஆகியவை ஒழியும் என்பது மருத்துவ நூலார் குறிப்பு.

"அறுகம்புல் வாதபித்தம் ஐயமோடு ஈளை
சிறுக அறுக்குமின்னும் செப்ப — அறிவுதரும்
கண்ணோயொடு தலைநோய் கண்புகையிரத்த பித்தம்
உண்ணோய் ஒழிக்கும் உரை" - அகத்தியர் குணபாடம்.

இதனை இடித்துப் பிழிந்த சாற்றைக் கண்ணில் வார்க்கக் கண்ணோயும் கண்புகைச்சலும் தீரும்; மூக்கிலிருந்து கொட்டும் குருதி நிற்கும். காயப்பட்ட இடத்தில் பூச அதிலிருந்து வடியும்

இரத்தம் நின்று விடும். புண்கள் மீது தடவினால் புண் ஆறிவிடும் வெள்ளிக் கிழமை அன்று இதன் சாற்றைக் குடித்து வந்தால் பெருச்சாளி விடம் படிப்படியாகக் குறைந்து மறையும்.

அறுகம்புல் முக்குற்றத்தால் விளையும் நோய்க் கூட்டங் களைக் களைந்து உடலுக்கு ஊட்டம் உண்டாக்கும் என்பது தேரன் வெண்பா தெரிவிக்கும் செய்தியாகும்.

அறுகம் புல்லுடன் சிறிது மஞ்சள் சேர்த்து அரைத்துத் தடவிவர, சொறி சிரங்கு, படர்தாமரை போம்.

அறுகம்புல், கடுக்காய்த்தோல், இந்துப்பு, கிரந்திதகரம், கஞ்சான்கோரை, இவற்றை ஓர் எடையெடுத்து மோர் விட்டு அரைத்தும் பூசலாம்.

அறுகம் வேர் :

அறுகின் கிழங்கால், தனியாத பற்பல வெப்பமும், முக்குற்ற நோய்களும் நீங்கும்; உடல் அழகு பெறும்.

இதனைக் கணு போக்கி கால் பலம் எடுத்து அத்துடன் வெண்மிளகு பத்து சேர்த்துக் குடிநீரிட்டு வடிக்கவேண்டும். பின்னர் அதனுடன் பாக்கு அளவு பசுவின் வெண்ணெய் கூட்டி உட்கொள்ளவேண்டும். மருந்தின் தீங்கு, இரசவேக்காடு, மூலக் கடுப்பு, நீர்க்கடுப்பு, நீர் அடைப்பு (கல்), வெட்டை, நீர்ப்புழை எரிச்சல் முதலானவைகள் நீங்கும்.

“ ஆரு அழல்எல்லாம் ஆறும் மூத் தோடமது
வீரு திருக்கும் நல்ல மேனிதரும் — மாருக்
கடியமர லங்கலணி காரளக மின்னே!
கொடி யறுகம் புற்கிழங்கைக் கூறு.

— அகத்தியர் குணபாடம்.

அறுகம்புல்லைத் தயிரில் கலந்து கொடுக்க நாட்பட்ட வெள்ளை நோய் நீங்கும். இவ் வேரைக் கொண்டு தூர்வைத் தைலம் என்றஓர் அருமை ஔடதம் தயாரிக்கலாம்.

குருமணியின் அருள்மொழி

அன்பும் அறிவும்

அமெரிக்காவில் அறிவு வளர்ந்துவருகிறது இந்தியாவில் அன்பு வளர்ந்துவருகிறது. அன்பு அறிவு இரண்டுமே தேவை தான். ஒன்று இருந்து ஒன்று இல்லாததால் இருநாடுகளுமே துன்பப்படுகின்றன.

சைவசித்தாந்தம்பற்றிக் கிடைத்தற்கரியகட்டுரை

[இது 3—4—1984 ல் வெளிவந்த "இந்து" விமர்சனத்தின் தமிழ் ஆக்கம் — ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்து உதவியவர் திரு. டி. என். ஆர்.]

சைவ சித்தாந்தம், வால்யூம் 1 : பதிப்பாசிரியர் சேக்கிழார் அடிப்பொடி டி. என். இராமச்சந்திரன், தஞ்சை — வெளியிட்டோர் : தருமபுர ஆதீனம், மயிலாடுதுறை, 609 001 : விலை ரூ. 16 — 50.

இங்கு விமர்சனம்பெறும் நூல் 26 கட்டுரைகள், ஒருகட்டளை நூல் (தத்துவக் கட்டளை) ஆகிய இவற்றின் தொகுப்பு. இவை சைவ சித்தாந்த வல்லுநர்களால் வரையப்பட்டவை. பாரதியார் நூல்களில் துறைபோகியவர் என்று ஏற்றுக் கொள்ளப் பட்டவரும், இந்நாளில் தமிழ்ச சைவம் என்று வழங்கி வருகின்ற சைவ சித்தாந்தத்தை ஆர்வத்தோடு விளக்க வல்லவருமான திரு. டி. என். இராமச்சந்திரன் இந்நூலின்பதிப்பாசிரியர் ஆவார். மறைந்தே போய்விட்டன என்று எண்ணப்பட்டுவரும் அருமையான கட்டுரைகளை எப்படியோ வெற்றிகரமாகத் தேடிப்பிடித்து வெளியிட்டிருக்கும் பதிப்பாசிரியரைப்பாராட்டவேண்டியகடப்பாடு நமக்குண்டு. முழுமையாகவோ, பகுதியாகவே இக்கட்டுரைகள் வெளிவந்திருப்பன பற்றி விசேடமாகக் குறிப்பிடுகின்றோம். ரெவரண்டு எச். ஆர். ஹாய்சிங்டன், ரெவரண்டுடபுள்யூ கௌடி, ரெவரண்டு எச். டபுள்யூ. ஷோமரஸ் ஆகியோரின் விளக்கங்கள் இந்நூலுள் இடம் பெற்றுள்ளன.

இந் நூலுள் கட்டுரை ஆசிரியர்கள் பற்றித் தரப்பட்டுள்ள வாழ்க்கைக் குறிப்புகள் பயிலவோர்க்குப் பயன்படும்வகையில் அமைக்கப் பட்டிருக்கின்றன. செய்திக் குறிப்புகளில் சில புதியவை என்று சொல்லவேண்டும். எடுத்துக்காட்டாக, ஒன்று கூறுவோம். திருவாசகத்தை மொழிபெயர்த்த பலர்புகழ் டாக்டர் ஜி. யு. போப், நோவா ஸ்கோஷியாவில் உள்ள பிரின்ஸ் எட்வர்டு தீவில் பிறந்தவர் என்பதும், அவர் சிறுவராக இருக்கும் போது அவர் குடும்பம் இங்கிலாந்திற்குக் குடி பெயர்ந்தது என்பதும் பலரும் அறிந்திராத செய்தி. ஹாய்சிங்டன் முதல் டாக்டர் க்ளென் ஈ யோக் ஈருக, பலர் வரைந்துள்ள மிகஅழகிய கட்டுரைகளைத் தாங்கிவரும் இந்நூலில் கால அடைவிற்கு அழுத்தம் தரப்பட்டுள்ளது.

ஆய்வாளர்களுக்கு இத் தொகுப்புநூல் மிகவும் பயன்படக் கூடியதாகும். இந்நூலின்முடிவில் (சைவசித்தாந்தம் பற்றிவெளி வந்துள்ள) ஆங்கில நூல்களின் பட்டியல் இணைக்கப்பட்டிருக் கின்றது. இதனைப் பதிப்பாசிரியர் தெரிவு செய்யப்பட்ட நூல் வரிசை என்று அடக்கத்தோடு கூறியிருப்பினும், இதனை விரி வான முழுப்பட்டியல்என்றே கூறலாம். இந்நூல்வரிசை இணைப் பால், பயன்படும் பெற்றிமையில் இந்நூல் மேலோங்கி நிற்கின் றது. இங்கும் கால வரிசைக்கே அழுத்தம் (முக்கியத்துவம்) தரப்பட்டுள்ளது.

குறைத்தே விலை வைக்கப் பட்டிருக்கும் 240 பக்கங்கள் கொண்ட இந் நூல் சைவசித்தாந்த இன்ஸ்டிடியூட் ஒன்று தோற்றம் கொள்வதற்கு முன்னோடியாக, அண்மையில் நிகழ்த் தப்பட இருக்கும் முதலாம் அகில உலக சைவ சித்தாந்த மாநாட்டில் வெளியிடப் பெறும். பொதுவாக, சமயக் கோட் பாடுகளில் நாட்டம் கொண்ட அறிஞர்கள், குறிப்பாக, சித்தாந் திகள் ஆகிய இவர்களின் போற்றுதலுக்கு இந்நூலின் பதிப் பாசிரியரும் தருமபுர ஆதீனத்தாரும் உரியர் ஆவர்.

பெரியது கேட்கின்.....

(முன் இதழின் தொடர்ச்சி)

6. மிகப்பெரிய நூலகம் :

அமெரிக்க நாட்டில் வாஷிங்டனில் உள்ள ஐக்கிய நாடுகள் காங்கிரஸ் லைப்ரரி. இதில் 4, 18, 74, 000 (நாலுகோடியே பதினெட்டுஇலட்சத்து எழுபத்துநாலு ஆயிரம்,புத்தகங்கள் உள்ளன.

7. மிகப்பெரிய சிலை :

அமெரிக்காவில் நியூயார்க்கில் உள்ள விடுதலைச்சிலை. இது 305 அடி உயரமுள்ளது.

8. மிகப்பெரிய தூரதரிசினி (teleseope) :

அமெரிக்கநாட்டில் கலிபோர்னியா மாநிலத்தில் உள்ளது இதன் விட்டம் 27 அடி உள்ளது.

9. மிகப்பெரிய அரண்மனை :

போப் ஆண்டவர் ஆளுகைக்கு உட்பட்ட வாடிகன் நாட்டில் உள்ளது. 14ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது இதில் 1400 தங்கும் அறைகள் உள.

எல்லாமும்வல்ல சித்தர்

வித்துவான் திரு. தா. குருசாமி

சித்தர்கள்பற்றி "சித்தர்களின் சமுதாய நோக்கு" என்ற ('ஞானசம்பந்தம்' 1982 மார்கழி இதழில்) கட்டுரை சிந்தனையைக் கிளறியது. கட்டுரையாளர் பொதுவாகச் சித்தர் நெறி பற்றிக் குறிப்பிட்டு "அவர்தம் நெறி போற்று வோமாக' என்று முடித்துள்ளார்.

சித்தர் நெறி :

பதினெண் சித்தர்கள் என்றுகூறப்படுவர் பலரும்பலசமயத்தைச் சேர்ந்தவர்கள். சித்தத்தில் சிவனுண்மை தெளிந்தவர்கள் சிலரே. கட்டுரையாளர் வரைந்ததுபோல அட்டமா சித்திகளும் வல்லவராயிருந்தவர் சிலரே. ஒருசிலர் ஒருசிலசித்திகள் கைவரப் பெற்றுச் சித்தராயினர். கொங்கணவர் கன்னபரம்பரை வரலாறு இதற்கு எடுத்துக் காட்டு. சித்தர் நெறி என்பது ஒருகட்டுப் பாட்டிற்குள் அடங்காத நெறியாகும். நண்டும், நந்தும் ஊர்ந்து சென்றது எவ்வாறு எழுத்தாகாதோ அதுபோல முழுமைபெறாத சித்தர்கள் சென்ற நெறி தெளிவுடைய மக்களுக்கு வழிகாட்டியாகாது.

சித்தமும் சிவமும் :

திருமுறை வாக்குகளும், பெரிய புராண கந்தபுராண திருவிளையாடற்புராண வாக்குகளும், அந்நெறி பிறழாத தாயுமானவர் பாடல் முதலான நூல்களுமே சித்தர் நெறியைக் காட்டுவன. சித்தம் சிவத்தோடு கலப்படையும் போது சித்தாகின்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகள், 'முத்தாமுத்தி' என்ற பதிகத்தில் 'சித்தா! சித்தர் திறங் காட்டும் சிவனே' என்று விளிக்கின்றார். கரணங்கள் நான்கில் 'சித்தம்' இரண்டாவது. இச்சித்தம் இருந்த நிலையை - இருக்க வேண்டிய நிலையைப் பெரியபுராணம் - அளப்பரும் கரணங்கள் நான்கும் சிந்தையே யாக' என்று குறிப்பிடுகின்றது. தருமைக்குருமணி மாசிலாமணி தேசிகர் குமரகுருபர சுவாமிகள் வரலாற்றனுபவத்தில் வாக்கு தடைப்பட்ட அனுபவம் பிரசித்தம்.

சித்தர்கள் சமுதாய நோக்கு :

சித்தர்கள் எனப்பட்ட ஒருசிலர் பதியுண்மையைப் பதிய வைத்தற்குப் புறம்பான வெறும் சமுதாயப் பார்வையிலும் நோக்கிலும் ஈடுபட்டனர். இக்கால 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' எனப்பிறழப்பேசி 'மகேசன்தொண்டினைக் கிள்ளி யெறிய முயற்சிப்பது போல, பசுபுண்ணியச் செயல் ஒன்றில்மட்டும் தலைப்பட்டாராவர். அச்செயல் இக்கால மருத்துவர்நிலைக்கு ஒப்பிடலாம். ஆதலின் தமிழ்மண்ணில் சித்தர்கள் எனப்படுபவரில் சமணரிருந்தனர்; வைணவர் இருந்தனர்; பௌத்தர் இருந்தனர்; உலகாயதர் இருந்தனர்; சைவரும் இருந்தனர். ஆகவே இத்சித்தர்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காகவே திருவிளையாடற் புராணம் ' எல்லாம் வல்ல சித்தரான ' திருவிளையாடலை விளக்கியது.

திருவிளையாடற் சிந்தனை :

ஏகநாயகனுகிய சிவபெருமான் சித்தரானுர். ஆகருடணம், அஞ்சனம், வசியம், வாதம், வயத்தம்பம் என்ற அருஞ்செயலைச் செய்தார். இவ்வைந்தின் விளக்கம் திருவிளையாடல் நூலில் காண்க. இதற்குமேல் ஆன்மாவின் தோற்றமற்று சிவத்தோற்றமாய் நிற்பவர் — தாமரையிலைத் தண்ணீர் போல் உலகில் உலவுபவர் முத்தராவர். இம்முத்தர்கள் பெரியோரை வியத்தலும் சிறியோரை இகழ்தலும் இல்லாத குணமுடையவர். இவர்கள் வியக்கும் படியாக சித்தயோகிகள் சித்துக் காட்டினர். பாண்டியன் சித்த யோகிகளைத் தரிசித்து ஊர் நாடு பெயர் வினவிய போது, பெருமான்

" சைவத் தானம் பலவும் தொழுதற் பரமாகி வந்தேம்
ஞானந்தரும் இந்நகர் இம்மையில் சீவன்முத்தி
மானந்தமான பரமுத்தி மறுமை நல்கும் "

(மால் + நந்தமான: பாசமாகிய மயக்கம்கெட) என்று கூறி,

" ஈண்டுள்ளவர்க்கு எம்விளையாடலைக்காட்டி இச்சை
வேண்டும்பல சித்தியும் நல்குவம் வேதமாதி
மாண்தங்கு எண்ணெண் கலைஞானமும் வல்லமல்லாற்
சேண்தங்கும் எல்லாப் பொருளும் வல சித்தரேம்யாம் "

என அருளுகின்ருர். ஏனையவை நூலிற்காண்க. இதனுல் சித்தர் என்பவர் இறைவழிபாடின்றி இருப்பாரேயாயின் முத்தரால்

விரும்பப்படார். பரமுத்தி, நாட்டம், மறுமைப்பயன் முதலியன நாட்டப்பட்டு இறையுண்மையும் தவவழிபாடும் சாதிப்பவரே எல்லாம் வல்ல சித்தராவார்.

திருமுறை வாக்கு :

சமணரும் புத்தரும் இருமைப் பயனையும் இழந்தவர் என்று சம்பந்தர் அருளுகின்றார் – அவர்கள் சித்தநெறியில் தலைப் பட்டிருந்தும் தமிழ்மண்ணில் அவர்நெறி எல்லாம் வல்லதாகப் போற்றப்படவில்லை.

> " சாக்கியப் பட்டுச்சமணுருவாகி உடையொழிந்தும்
> பாக்கியமின்றி இருதலைப் போகமும் பற்றும்விட்டார் "

என்று அருளுதல் கொண்டு எல்லாம் வல்ல சித்தர் நிலையை ஒருவாறு சிந்திக்கலாம்.

குருஞானசம்பந்தரும் சித்தரும் :

குருஞானசம்பந்தர் நூல்களில் இரண்டு பிரேமா பிரசுரம் வெளியிட்ட பதினெண் சித்தர் பாடலில் அடங்கியுள்ளது. குருஞானசம்பந்தர் சித்தபுருடர் – சிவநெறிவளர்த்த கவியோகி அப்பெரியார் ' எல்லாம் வல்ல சித்தர் ' பற்றி அருளிச்செய்யும் மூன்று பாடல்கள் – சிந்தனைக் குரியன.

> " எல்லாமும் வல்லசித்தர் என்றக்கால் என்னுடைய
> பொல்லாக் கருத்தகற்றப் போகாதோ "

என்றும்,

> என்போல் மலக்கடினர் எவ்விடத்தும் கண்டதுண்டோ
> இன்பே மதுரைக் கிறைவனே — அன்பேதும்
> இல்லா தெனையாண்ட எண்ணத்தால் தேவரீர்
> எல்லாமும் சிவல்லத்த ரே.

என்றும்,

> " அன்பர்க் கருள்புரிவ தல்லால் தேவரீர்
> வன்பர்க் கருள் புரியமாட்டீரேல் — உம்பர்தொழும்
> நல்லார் புகழ் மதுரை நாதரே ! தேவரீர்க்கு
> எல்லாமும் வல்லசித்தர் ஏன்? "

என்றும் கூறியருளிய திருப்பாடல்கள் ' சித்தர்கள் யார்? என் பதையும், எல்லாம்வல்ல சித்தரை நாம் நாடி, அட்டமாசித்தி

அவாக்களை ஒழிக்கவேண்டும் என்றும் குறிக்கப்படுகின்றன. சித்தர் என்பவர்கள் சேரவேண்டிய இடம் அப்பர்பெருமான் கூறியுள்ளதுபோல் குருலிங்க சங்கம வழிபாட்டில் தம்மை ஆற்றுப்படுத்தித் தாமும் முக்தி நெறியில் நிற்பவர் ஆவர். இதனை அப்பரடிகள்,

" சித்தி செய்பவர் கட்கெல்லாம் சேர்விடம் சென்று கூடப்
பத்தி செய்பவர்கள் பாவம் பறைப்பவர் இறப்பிலாளர்
முத்தி செய் பவள மேனிமுதிரொளி நீலகண்டர்
வித்தினன் முளையர் வீழி மிழலையுள் விகிர்தனரே "

(திருவீழிமிழலை நேரிசை)

என்ற திருவாக்கால் உணரலாம்.

குருமணியின் அருள்மொழிகள்

அன்பே சிவம்

உண்மை ஞானம் வந்தவர்கள் – நிலைபேறுடைய ஞானம் வந்தவர்கள். அந்தஞானத்தால் இறைவனிடத்தில் அன்புமிக்குடையவர் ஆவார்களாயின், 'முற்றறிவும் பேரருளும்' உடையவனாகிய இறைவன் அந்த அன்பர்கள்வேறு, தான்வேறு என்னும்படிவேற்றுமைப் பட்டு நிற்பானோ? நில்லான்.

உள்ளக் கோயில்

அன்பு, ஒழுக்கம், ஆசாரம் முதலிய பண்புகளால் நம்மனத்தைத் தூய்மை அடையச் செய்யவேண்டும். பின்னர் நாள்தோறும் நாம் செய்யும் வழிபாடுகளால் இறைவனை நம் உள்ளத்தில் எழுந்தருளுவித்துப் போற்றும் நிலைக்கு நம்மை உயர்த்திக் கொள்ள வேண்டும்

இறைவன் ஆற்றல்

திருக்கோயில்கள் இறைவனது ஆற்றல் தேங்கி நிற்கும் இடங்கள், மின்னலாற்றலைத் தேக்கி நிற்கும் நிலையங்கள் போலவும், தண்ணீர் தேங்கிநிற்கும் நீர்த் தேக்கங்கள் போலவும் இறை ஆற்றல் தேங்கி நிற்கும் இடங்களாகக் கோயில்கள் உள்ளன.

ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகளின்

திருவருட்பாத் திரட்டு

(பொழிப்புரையுடன்)

வித்துவான் திருமதி. ப. நீலா எம். ஏ.,

(மலர் 44, இதழ் 1, பக்கம் 49 இன் தொடர்ச்சி.)

மேவுசீர்க் காசி விசாலாக்ஷி யம்மைபங்கன்
சேவுடையான் ஞானச் சித்தன்பால் சென்றெனக்கிங்
காவியாந் தாரகத்தை யருளுநா ளென்றென்று
பூவையே கேட்டுவந்துன் பொன்வாயாற் சொல்லுவையே.6

(பொ - ரை) சீர்மேவிய காசியில் தடங்கண்ணியின் பங்கனும் - எருது வாகனமுடைய ஞானத்தையே அறிவாகக் கொண்டோன் பால் சென்று எனக்கு உயிராகுந் தாரகத்தை அருளிச்செய்யும் நாள் எதுவென்று பூவையே! கேட்டுவந்துன் அழகியவாயால் சொல்லுக.

(கு - ரை) சீர்மேவு என மாற்றுக. சே - எருது 'சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி (திருநாவு - 6 -32 - 9) பூவை-நாகண வாய்ப்பறவை' பொன் - அழகு. 'பொன்னார் மேனியனே' (சுந்தரர் - 7 - 24 - 1) எனவருவது நோக்கலாம்.

மின்னுமுத்த ரீகத்தை வீசும்விசா லாக்ஷிபங்கன்
தன்னிகராங் காசியில்வாழ் சற்குருமுன் சென்றெனக்குள்
உன்னுமொரு தாரகத்தை யோதுநா ளென்றென்றிங்
கன்னமே கேட்டுவந்தென் அகமகிழ விளம்புவையே. 7

(பொ - ரை) ஒளிரும் மேலாடையை வீசும் விசாலாட்சியைப் பங்கிலுடையான் - தன்னையொத்த காசியில் வாழும் சற்குருவாம் அவனிடம் சென்று நினைக்கப் படுகின்ற ஒப்பற்ற தாரகத்தை ஓதும்நா ளெதுவென்று அன்னமே! கேட்டுவந்து என்மனம் மகிழக் கூறிடுக.

(கு - ரை) உத்தரீயம் - மேலாடை. 'திருமுலைத்தரள உத்தரீயமும்' (மீனாட்சி பிள்ளை-101) காசியில் இறப்போரைத் தன்மடியிலிட்டு அவர்கள் களையைப்போக்க மேலாடையால்வீசுகிருள்

என்பது புராணச்செய்தி. தன்னிகர் – இறைவனுக்குச் சமமான. தன் – என்ற ஒருமை இறைவனைக் குறிப்பதே. ' தன்னெக்கும் செல்வக்கமலைப் பிரான் செஞ்சடாடவி' – (திருவாரூர்நான். 39) தம் - என்பதாகிய பன்மை உயிரைக் குறிக்கவரும். ' தம்மையுடைய தமையுணர்ந்து தன்னுணர்வார்' (சிவஞானபோத – அவையடக்கம்)

விறல்கொண்ட காசி விசாலாக்ஷி யம்மைபங்கன்
திறல்வே லவன்றாதை சிவன்பால்சென் றேயெனக்கிங்
குறவாகுந் தாரகத்தை யோதுநா ளென்றென்று
புறவேநீகேட்டுவந்துன்பொன்மொழியாற்சொல்லுவையே.

(பொ – ரை) வெற்றிகொண்ட காசி தடங்கண்ணி பங்கன் – முருகப் பெருமாளின் தந்தையென்ற சிவனிடம் சென்று எனக்குஉறவாகுந் தாரகத்தை ஓதும்நாள் என்றுஎன்றுபுறுவே! நீ கேட்டுவந்து அழகு மொழியால் சொல்வாயாக.

(கு – ரை) தன்னிடம் வந்து இறந்த உயிர் நரகம் புகாமல் சிவலோகம் புகும்படிச் செய்யும் காசி கூற்றுவனை வெற்றி கொண்ட காரணத்தால் 'விறல்கொண்ட காசி' – எனப்பட்டது. வேலவன்தாதை – தேவர் துன்பம்தொலைய வேலவனை அருளியவன் – என் பிறவித் துன்பம் தொலையவும் தாரகம் அருளுவான் என்பதுபட நின்றது. புறு – புறவு எனச் செய்யுளில் வரும்.

" குறியதன் கீழாக் குறுகலும் அதனொடு
உகரம் ஏற்றலும் இயல்புமாம் தூக்கின் "

(நன். உயி. புண–172)

மின்றிகழுங் காசி விசாலாக்ஷி யம்மைபங்கன்
குன்றமெனுங் கயிலைக் கோமான்பாற் சென்றெனக்குள்
ஒன்றுமறைத் தாரகத்தை யோதுநா ளென்றென்றிங்
கன்றிலே கேட்டுவந்திங் ககமகிழ விளம்புவையே. 9

(பொ – ரை) ஒளிதிகழும் காசி விசாலாட்சி பங்கன் - கயிலைக்குன்றின் தலைவனிடம் சென்று என்னுள் பொருந்தும் வேதமான தாரகத்தை ஓதும் நாள் என்று என்று அன்றிலே! கேட்டுவருக.

(கு – ரை) அன்றில்– ஆண்பெண் இணைபிரியாத–நிலத்தில் வாழும் பறவை. அன்றில் முட்டா தடையுஞ் சோலை ஆரூர் அகத்தீரே (சுந்தரர்–7. 95–௬)

வெள்விடையான் காசி விசாலாக்ஷி யம்மை பங்கன்
நள்ளிருளி லாடகில நாதன்பாற் சென்றெனக்கிங்
குள்ளுயிராந் தாரகத்தை யோதுநா ளென்றென்று
புள்ளினங்காள் கேட்டுவந்தென் பொய்யொழியச் சொல்
[வீரே 10

(பொ – ரை) வெள்ளை எருதுடையானும் செறிந்த இருளில் ஆடவல்லவனுமாகிய காசி விசாலாட்சி பங்கனிடம் சென்று – எனக்கு உள்உயிரான தாரகத்தை ஓதும் நாளெது வென்று புள்ளினங்காள் கேட்டுவந்து என்னுடல் நீங்கக் கூறுங்கள்.

(கு – ரை) அகிலநாதன் (விசுவநாதன்) நள்ளிருளில் ஆடவல்லான் என்பதை 'நள்ளிருளில்நட்டம் பயின்றுடும் நாதனே' (திருவா–சிவபுரா–89) என்னும் திருவாசகம். பொய் ஒழிய– உடல்நீங்க.

" பொய்த் தன்மைத் தாய மாய
போர்வையை மெய்யென் றெண்ணும்
வித்தகத் தாய வாழ்வு
வேண்டிநான் விரும்பகில்லேன் " (சுந்தர – 7–8–9)

உடல்நீங்க – தாரகம் வேண்டும். இவருள்ளம் (6–5) முன்பே தெரிந்ததுதானே. பறவைகளையே தேர்ந்துசொன்னது–சிறகுகள் உடைய சிறப்பினுல் பறந்துசெல்லும் வாய்ப்புப்பற்றி எனலாம். ' சிறையாரு மடக்கிளியே ' – என திருஞானசம்பந்தரும், ' கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி ' – எனக் குறுந் தொகையில் இறையனுரும் இவ்வாறே சிறகைச் சிறப்பிப்பது காண்க.

" கூடுமன்னப் பெடை காள்குயில் வண்டுகாள்
ஆடுமம் பொற்கழ லடிகளா ரூரரைப்
பாடுமா றும்பணிந் தேத்துமா றுங்கூடி
ஊடுமா றும்மிவை யுணர்த்தவல் லீர்களே ' –(7–37–10)

என சுந்தரர் பறவைகளைத் தூது அனுப்பினமை இணைப்பாக நோக்க உரியது.

(தொடரும்)

கட்டுரை எண். 56

அபிராமி அந்தாதி

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன், M. A., B. Lit.,
D. P. P. A., D. U. N., I. U.
பருத்தியூர்

மின் ஆயிரம் ஒரு மெய்வடிவாகி விளங்குகின்றது
அன்னாள்; அகமகிழ் ஆனந்தவல்லி; அருமறைக்கு
முன்னாய் நடு எங்குமாய், முடிவாய முதல்விதன்னை
உன்னாது ஒழியினும், உன்னினும் வேண்டுவது ஒன்றில்லையே.

அ. மின் ஆயிரம் ஒரு மெய்வடிவாகி விளங்குகின்றது அன்னாள்

(1) ஆயிரம் மின்னல்கள் ஒன்றாகத் திரண்டு உண்மை வடிவு பெற்றுத் திகழ்வது போன்ற பேரொளி வடிவானவள் அம்பிகை.

(2) பேரொளிப் பிழம்பாகிய சக்தியின் வடிவுக்கு உவமை ஏதும் கூறுதல் இயலாது. எனினும், ஆயிரம் ஆதவன் உதித்தது போன்ற ஒளிர்திருமேனி என்றும், கோடி சூரியப்பிரகாசம் என்றும் வருணித்தல்கவிமரபு. அம்முறையில் அபிராமிபட்டரும் அவளது மேனியை ஆயிரம் மின்னல்களுக்கு இணையான தென்று கூறுகிறார்.

(3) மின்னல் கணப்பொழுது தோன்றி மறையும் இயல்பினது. அதன் வடிவு பொய்யானது. "மின்னே நிகர்வாழ்வு" என அருணகிரியார் நிலையற்ற வாழ்க்கைக்கு மின்னலினை உவமை கூறுவார். அப்படி நிலையற்றதல்ல அம்பிகையின் வடிவு. அன்றும், இன்றும், என்றும் நின்று நிலைத்திருக்கும் மெய்யான அரும் பெருஞ்சோதி வடிவு. ஆகவே, "ஒரு மெய் வடிவாகி" என்றார்.

(4) அவள் ஸ்தூலமான வடிவுடன் விளங்கும் பொழுது அவ்வாறு ஆயிரம் மின்னல்கள் ஒன்று திரண்டாற் போன்ற

திருமேனி எடுக்கிறாள் 'மெய்' என்பது உடலினையும் குறிக்கு மாதலால் இங்ஙனம் ஸ்தூலவடிவெனவும் கொள்ளலாம்.

(5) யோகிகளுக்கு அவள் கணநேரம் தோன்றி மறையும் மின்னல்கொடி போன்று திருக்கோலம் காட்டி மறைகிறாள். ஆனால் அதுவும் அவளது நிலையான வடிவாகிவிடுவதில்லை. அதனையும் விட பன்மடங்கு மேலான பேரொளிக் கொண்டல் மின்னல்கள் ஆயிரம் திரண்டாற் போன்ற ஜோதி வடிவு என வுணர்ந்து அதனையும் காண மேலும் முயல்கின்றனர்.

(6) மின் ஆயிரம் மெய்வடிவானவள் என்று கூறுமிடத்து நவீன விஞ்ஞான அடிப்படையிலும் விரிவுபடுத்த இடமிருக் கிறது. வானில் தோன்றும் மின்னலிலிருந்தும் மின்சாரம் உற்பத்தி செய்யலாமெனவும், அவ்வாறு ஒருமின்னலிலிருந்து உற்பத்தி செய்யக்கூடிய சக்தி பல ஆயிரம் 'மெகாவாட்' கணக் கில் கிடைக்கும் என்றும் கூறுகின்றனர். அந்த மின்னல் மின் சக்தி, நீர் மின்சக்தி, அனல்மின்சக்தி, அணுமின்சக்தி, சூரியமின் சக்தி என்றெல்லாம் ஆயிரம் வகைகளில் உற்பத்திசெய்யும் மின்சக்திகளை விட பேராற்றல் - இணையிலா ஆற்றல் படைத் தவள் தான் பராசக்தியாகிய அம்பிகை. பேரொளி வடிவால் மட்டுமின்றி ஆற்றலாலும் அவளை மின்னலுக்கு இணை கூறுதல் ஏற்கும்.

ஆ. அகமகிழ் ஆனந்த வல்லி

(1) எல்லா வுள்ளங்களிலும் உள்மகிழ்வான ஆனந்தமய மான கொடியனையவளும் அபிராமி ஆவாள்.

(2) சிவ பெருமானின் திருவுள்ளம், தேவர்களின் உள்ளங் கள், அடியவர்களின் உள்ளங்கள் அனைத்திலும் ஆனந்த மய மாய் இருப்பவள் அம்பிகை. மேற்கண்டோரின் மகிழ்வுகண்டு தானும் அகமகிழ்ந்து நிற்பவள். அதனால் அகமகிழ் ஆனந்த வல்லி.

''வல்லி - கொடி' என்பதன் உட்கருத்து முன்னர் விரிவு படுத்தப்பட்டது (கொடியே இளவஞ்சிக் கொம்பே என்ற பாடலில்)

(3) 'பரமானந்தா' - 'பெரும் ஆனந்த முள்ளவள்' என சகஸ்ரநாமம் புகழும். இறைவன் ஆனந்தக் கூத்தன் இறைவி அகமகிழ் ஆனந்தவல்லி. 'சின்மயானந்த பரம்' 'தேஜோமயா னந்த பரம்', 'பரிபூரணானந்தமயம்' என்றெல்லாம் கூறுவார் தாயுமானவர்.

இ. அருமறைக்கு முன்னாய் நடுஎங்குமாய் முடிவாய முதல்வி

(1) அரிய வேதங்களின் தொடக்கம், நடு மற்றும்முடிவாக இருப்பவளும் அம்பிகை. இறைவனை வேத முதல்வன் என்பர். அவனது துணைவி வேத முதல்வி.

(2) அதாவது வேதமெங்கணும் அவளது புகழே பரவி நிற்கிறது. சுருதிகளின் பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேருமாய் இருப்பவள் என்றும் மறையின் பரிமளம் என்றும் முன்னர் புகழ்ந்தார். வேதத்தின் முன்னால்நிற்பது பிரணவம். நடுவாய்த் திகழ்வது வேதசாகைகள். வேதாந்தமாவது உபநிடதங்கள். ஆகவே, பிரணவப் பொருளாயும், சாகைகள்காட்டும் பொருளாகவும் உபநிடதங்களின் பொருளாகவும் இருப்பதால் 'முன்னாய் நடு எங்குமாய் முடிவாய முதல்வி' என்றார்.

(3) "வேதாந்தப் ப்ரதிபாத்யமான விபவாம்" என்ற ராஜராஜேஸ்வரி அஷ்டக ஸ்லோகம் அவள் "வேதத்தின் முடிவான பொருளெனப் புகழ் கொண்டவள்" என்று போற்றுகிறது.

(4) அருமறைகளைத் தமிழ்த் திருமுறைகளாகக் கொண்டாலும் அவளே முன்னாய் நிற்பாள், ஏன் எனில் அவள் திருமுலைப் பால் அளித்த வரலாற்றிலிருந்து திருமுறைகளின் தொடக்கம் ஏற்படுகிறது. நடுவெங்கும் முடிவிலும் இறைவனுடன் இணைத்துப் புகழப்படுகிறாள்.

ஈ. முதல்விதன்னை உன்னாது ஒழியினும்: உன்னினும் வேண்டுவது ஒன்று இல்லையே

(1) முதல்வியாகிய அம்பிகையினை அடியவர்கள் நினைக்கினும், அன்றி நினையாதொழியினும அவர்களிடமிருந்து அவள் எதனையும் எதிர்பார்ப்பதில்லை. அவளால் வேண்டப்படுவது ஏதும் இல்லை.

(2) "திரிபுரை பாதங்கள் சேர்மின்களே" என முன் பாட்டில் அடியவர்களை அம்பிகை வழிபாட்டில் ஆற்றுப்படுத்தினார் அபிராமிபட்டர். அவ்வாறு ஆற்றுப்படுத்தியது அடியவர்களின் பொருட்டே அல்லாது அம்பிகை பொருட்டாக அல்ல. "நீவிர் அவளை வழிபட்டால் முத்தியிருகவுள்ள அனைத்தும் கிட்டும். மாறாக நீவிர் வழிபடுவதால் அவளுக்கு ஏதும் கிட்டப் போவதில்லை; ஏனெனில் அவள் எவரிடமிருந்தும் எதனையும் வேண்டாத மேல்நிலையில் இருக்கிறாள்" என்பதைஇப்பாடலில் தெளிவாக்குகிறார்.

(3) 'அவ்வியாஜ கருணாமூர்த்தி' என்கிறது சகஸ்ரநாமம். அதாவது அம்பிகை காரணமின்றிக் கருணைபுரிபவள் அல்லது எதிர்பார்ப்பின்றிக் கருணைபுரிபவள்" என்கிறது.

ஒரு குழந்தையின் கையில் இனிப்புப் பண்டம் ஒன்று இருந்தது. "நான் உனக்குச்சட்டைவாங்கித்தந்தேன் அல்லவா? நீ என்னிடம் இனிப்பை கொடு" என்று தந்தை கேட்டார். "சற்றுமுன் உனக்கு நான் சோறு ஊட்டினேன் அல்லவா? நீ என்னிடம் கொடு" என்றாள் தாய். "நான் தானே சுவையான கதை சொன்னேன்? என்னிடம் கொடு" என்றாள் பாட்டி. "நான் தலைவாரிப் பூச்சூட்டினேனே? என்னிடமே கொடு" என்றாள் அக்காள். இவ்வாறு குழந்தையின் கையில் இருக்கும் இனிப்புக்காகப் பலரும் பல காரணங்களைக் கூறி வேண்டினர். ஆனால் அக்குழந்தை மேற்கூறிய காரணங்களைக் கருதாது அருகில் நிற்கும் வேலைக்காரச் சிறுமியிடம் இனிப்பைத் தந்து விட்டது! இச்செயல் போன்றதுதான் அவ்வியாஜ கருணை என்பது. தான் எதனையும் காரணமாகக் கருதாது, பலன் எதிர் பாராது அடியவர்களுக்குக் கருணைகாட்டுபவள் தான் அம்பிகை.

(4) 'அசகாய சூரன்' அல்லது 'கூட்டு ஒருவரையும் வேண்டாத கொற்றவன்' என்ற நிலையில் இருக்கும் கடவுளுக்குப் பிறரது தயவு உதவி எதுவுமே தேவையில்லை. ஆனால் அவள் தயவும் உதவியும் அனைவருக்கும் தேவை. அம்பிகையை சகஸ்ரநாமம், 'நிஷ் – பரிக்ரஹா' – 'தனக்கென உதவியாள் வேண்டாதவள்' எனப் புகழுகிறது.

(5) 'நிஷ்காமா' என்பது மற்றுமொரு நாமம். விருப்பம் இல்லாதவள் என்பது அதன் பொருள், அவளுக்கென எவ் விருப்பமும் இல்லை. அல்லது அவள் வேண்டுவது ஒன்றுமில்லை.

(6) இறைவனிடம் தன்னையே தந்த மணிவாசகப் பெருமான் "அந்தமொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்; யாது நீ பெற்றது?" என இறைவனை வினவுகிறார். அவ்வாறே அக மகிழ் ஆனந்தவல்லி யாகிய அம்பிகையும் நம்மிடம் இருந்து வேண்டுவது ஒன்றுமில்லை.

மனக்கவலை நீங்கி மகிழ்ச்சி எய்துதல் இப்பாடலின் பாராயண பலன் ஆகும்.

(தொடரும்)

கதிரவன் குடும்பம்

2. பூமி – III : சந்திரன்

அகண்டவானத்தில் பூமிக்கு மிகச் சமீபத்தில் – பூமியின் துணைக்கோளாகச் சந்திரன் திகழ்கிறது. சந்திரன் பூமியைச் சுற்றிவரும் துணைக்கோள் ஆகும். பூமி தோன்றிய காலத்தி லேயே சந்திரனும் தோன்றியிருக்கக் கூடும் என்பது விஞ்ஞானி கள் கருத்து. பூமியிலிருந்து சந்திரன் சுமார் 2, 38, 000 மைல் தொலைவில் உள்ளது. சந்திரனின் குறுக்களவு 2136 மைல் என விஞ்ஞானிகள் கணித்துரைக்கின்றனர். சந்திரனின் மேற்பரப் பானது பூமியின் மேற்பரப்பில் பதினன்கில் ஒருபங்கே உள்ளது. எடையோ பூமியின் எடையில் எண்பத்திரண்டில் ஒருபங்கு ஆகும். நிலவுக்கு, நிலவுலகின் ஈர்ப்புசக்தியில் ஆறில் ஒருபங்கு தான் உள்ளது. பூமியில் 90 பவுண்டு உள்ள ஒரு சிறுவன் மதி மண்டலத்தில் 15 பவுண்டுதான் இருப்பான். மதிமண்டலத்தில் காற்று மண்டலம் இல்லை. மேகக் கூட்டங்களும் இல்லை. நீரும் இல்லை. நீரும் காற்றும் இல்லாத காரணத்தினல் உயிர்க்கூட்டம் அங்கு நிலவ வாய்ப்பு அறவே கிடையாது.

சந்திரன் பூமியைச்சுற்றிவரும்வழி முழுவட்டவடிவு அன்று. ஆதலின் ஒருசமயம் இது கதிரவனுக்கு சமீபத்திலும் பிறிதொரு சமயம் அதற்குத் தொலைவிலும் இருக்கும். நிலவுலகிற்கு அது மிக அண்மையில் வருங்கால் இதன் தொலைவு சுமார் 2, 21, 000 மைல். தூரத்தில் செல்லுங்கால் இதன் தொலைவு சுமார் 2, 51, 000 மைல்கள் ஆகும். சந்திரன் பூமியைச்சுற்றுங்கால் மேற்கி லிருந்து கிழக்காகச் சுற்றுவதுடன் பூமியுடன் சேர்ந்து ஆண்டிற் கொருமுறை கதிரவனையும் வலம் வருகிறது. இது பூமியை ஒருமுறை சுற்றிவருவதற்கு 29 நாட்கள், 12 மணி, 44 நிமிடம், 28 விநாடி காலம் ஆகின்றது. இது நமக்கு ஒருமாதம் ஆகிறது – இதுவே நமது மாதக் கணக்கும் ஆகும். பூமியைப் போலவே நிலவுக்கும் சுழற்சியுண்டு. நிலவிற்குத் தன் னைச் சுற்றும் நேரமும் பூமியைச்சுற்றும் நேரமும் ஒன்றேஆகும். எனவே திங்களில் ஒருமாதமே ஒருநாளாகும். நிலவு ஒரே பக்கத்தை நமக்குக் காட்டிக்கொண்டே சுழல்கிறது. இதன் மறு பக்கத்தை நாம் கண்டதே இல்லை ஆயினும், சமீபத்தில் நிலவு மண்டலத்தை நோக்கிச் சென்ற செயற்கைக் கோள்கள்

(Sattelites) இதன்மறுபக்கத்தையும் நிழற்படம் (Photo) எடுத்து அனுப்பியுள்ளன. சந்திரனில் பாதிமாதம் பகலாகவும், மற்றொரு பாதிமாதம் இரவாகவும் இருக்கும். இரவில் வெப்பநிலை குறைந்தும் பகலில் இஃது அதிகமாகவும் இருக்கும். வெப்பத்தைக் குறைத்துத்தணிக்க நிலவில் காற்று மண்டலம் இல்லை.

சந்திரனிலிருந்து பொழிகின்ற நிலவுஒளி அதற்குச் சொந்தமானது அன்று. இது கதிரவனிடமிருந்தே ஒளியைப் பெற்று அதனை நமக்கு நிலவுஒளியாகப்பொழிகிறது. முழுமதியிலிருந்து நாம் பெறுகின்ற ஒளி, சூரிய ஒளியில் ஐந்து இலட்சத்தில் ஒருபங்கு என்று விஞ்ஞானிகள் கணித்துரைக்கின்றனர்.

சந்திரமண்டலத்தைத் தொலை நோக்கியின் மூலம் ஆய்ந்ததில் சில உண்மைகள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. இங்கு உன்னதமான மலைத்தொடர்கள் உள்ளன. இங்கு முப்பதினாயிரத்திற்கு மேற்பட்ட பள்ளத்தாக்குகள் உள்ளன. நமது எவரெஸ்ட் சிகரத்தைவிட உயர்ந்த பல கொடுமுடிகள் இங்குள்ளன. மதிமண்டலத்திற்கு மனிதன்செல்லும்முயற்சி வெற்றி பெற்றபின் மேலும் பல செய்திகள் நமக்குத் தெரியலாயின.

1958லிருந்து அமெரிக்காவும், ரஷ்யாவும் பல துணைக்கோள்களைச் சந்திரனை நோக்கி ஏவின. வான்கார்டு 1, பயனியர் 1 லூனிக் 2, லூனிக் 3, ஸ்புட்னிக் 4, டிஸ்கவரர் 13, ஸ்புட்னிக் 5, அப்போலோ 2, சாட்டர்ன் 5 - இப்படியாகப் பல துணைக்கோள்கள் ஏவப்பட்டன. முதன் முறையாக அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஆம்ஸ்ட்ராங்கும், அல்டிரினும் நிலவில் காலடி வைத்துத் தம் நாட்டுச் சின்னத்தைப் பொறித்தனர். இது நிகழ்ந்தது 1969 ஜூலை மாதத்திலாகும்.

நம் பூமியில் நீரும் காற்றும் இல்லை என்றால் ஏறத்தாழ பூமியும் சந்திரனைப் போலதான் இருந்திருக்க முடியும். சந்திரன் காற்றோட்டமோ, மேகமோ, வானவில்லோ, கடல்களோ, ஏரிகளோ, இல்லாத ஒருசூன்ய உலகமாகும். அங்கு ஒரு புல்விதை முளைப்பதற்கும் போதுமான ஈரப்பசை கூட இல்லை. ஒரு மண்புழு சுவாசிப்பதற்குப் போதுமான காற்றும்கூட இல்லைஎன்றால், மனிதன் அங்குக்குடிவாழச் சாத்தியமேஇல்லை. காற்றுஇல்லாத சந்திரன் ஒலியற்ற ஓர் உலகம் ஆகும். ஏனெனில் ஒலி ஊடுருவிச் செல்ல ஓர் ஊடகம் (Medium) வேண்டும். அங்குக் காற்று இல்லாத காரணத்தால் தூரத்தில் எழும் குரல் உங்கள் காதில் விழாது. நம்முகத்தருகில் வெடிக்கும் துப்பாக்கி வேட்டுச்சத்தம் கூடக் காதில் கேளாது.

காற்று மண்டலம் இல்லாத காரணத்தால், சந்திரனின் மேற்பரப்பு மிகக் கடும் வெப்பத்திற்கும், மிகக்கடும் குளிருக்கும் உள்ளாகி வருகிறது. அங்கு, பகல் என்பது இரண்டுவாரகாலம் நீடிக்கிறது. அப்பகலில் உச்சிப்பொழுதில் பாறைகள் கொதிநீருக்குள்ள வெப்பத்தின் அளவுக்குச் சூடுறுகிறது. நீண்ட இரவு வரும்பொழுது அப்பாறைகள் உலர் பனிக்கட்டி அளவுக்குக் குளிர்ந்து விடுகிறது - அதாவது திடநிலையிலான கார்பன்டையாக்ஸைடின் அளவுக்குக் குளிர்ச்சியடைகிறது.

சந்திரன் ஓர் உயிரற்ற துணைக்கிரகம் (Dead planet) என்று விஞ்ஞானிகள் கண்டறிந்து அறிவித்து உள்ளனர்.

— தொகுத்தளித்தவர்: சுவாமி வீரபாகு.

ஆதாரம் :

A Short History of The Universe
By Arther S. Gregor (1964) Newyork.

ஒளியாண்டு என்றால் என்ன ?

ஒளியாண்டு (Light year) என்று வானசாத்திரத்தில் வழங்கப் பெறுகிறது. ஒளி ஒரு வினாடிக்கு 1, 86, 000 மைல் வேகத்தில் செல்லுகிறது. ஓர் ஆண்டில் அது 5·878 மிலியன் மைல் செல்லும் — அதாவது 587 கோடியே 80 இலட்சம் மைல்கள். ஓர் ஒளியாண்டு என்பது ஒரு குறிப்பிட்ட கிரகத்திடமிருந்தோ நட்சத்திரத்திடமிருந்தோ அது நம்பார்வைக்குப் படுவதற்கு ஆகும் காலமாகும்.

வானத்தில் ஸிரியஸ் என்றதோர் நட்சத்திரம் உள்ளது. அதன் ஒளி நம் கண்ணுக்குத் தென்பட $8\frac{1}{2}$ ஒளியாண்டுக் காலம் ஆகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது 587கோடியே 80 இலட்சத்தைப் போல $8\frac{1}{2}$ மடங்கு மைல்கள் இந்த நட்சத்திரம் காணாமல் போனாலும் அது நம்கண்ணை விட்டு மறைய $8\frac{1}{2}$ ஒளியாண்டுக் காலம் ஆகும்.

செய்திகள்

ஆயில்யத்திருநாள் ஆலயவழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் தேவாரப் பாடல்பெற்ற சிவத்தலங்களில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்ந்து வருகின்றன. இம்மாதம் 13—12—84 வியாழக்கிழமை காலை 9 மணியளவில் திருஅறையணிநல்லூர் ஸ்ரீ அறையணிநாதர் ஆலயத்திலும் நண்பகல் 12 மணியளவில் திருக்கோவலூர் ஸ்ரீ வீரட்டேசுவரர் ஆலயத்திலும் நடைபெற்றது. சுவாமி அம்பாளுக்கும் மற்றும் மூர்த்திகளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. காலை 11 மணியளவில் திருக்கோவலூர் ஸ்ரீ வீரட்டேசுவரர் ஆலயத்தில் தருமையாதீனத் தமிழ்ப்புலவர், வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., 'திருமுறைப் பெருமை' பற்றியும் ஆர்க்காடு, புலவர் திரு. ஆர். இராமலிங்கம் 'மெய்ப்பொருள் நாயனார்' பற்றியும் சொற்பொழிவாற்றினர். திருக்கோவலூர் இறையருள் மன்றத்தினர் விழாவிற் கலந்து கொண்டனர்; மற்றும் அன்பர்பலர் விழாவிற் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

தருமையாதீனம்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் மார்கழிமாதத் தலவழிபாடு

மார்கழி மாதம் ஓர் ஆண்டின் பன்னிருமாதங்களுள் மிகச் சிறந்ததாக மக்களால் கருதப்படுவது. " மாதங்களுள் மார்கழி மாதமாக இருக்கிறேன் " என்று கிருஷ்ணபரமாத்மா பகவத் கீதையில் கூறி இருக்கிறார் இம்மாதத்தை நம் முன்னோர்கள் இறைவழிபாட்டுக்கு உரிய மாதமாகக் கொண்டுள்ளனர். திருக்கோவில்களில் திருப்பள்ளியெழுச்சி வழிபாடு என்ற வழிபாட்டு முறையை ஏற்படுத்தி இம்மாதம் முழுதும் மக்கள், வழிபாட்டில் திளைத்திருக்க வழிவகுத்துள்ளனர்.

நமது ஓர் ஆண்டுக்காலம் தேவர்களுக்கு ஒருநாள் என்றும் மார்கழி மாதம் தேவர்கட்கு விடியற்காலம் என்றும், அவர்க

இறைவழிபாடு செய்யும் விடியற்காலை வேளையில் நாமும் இறைவழிபாடு செய்து இறையருள் பெறவேண்டும் என்றும் இம் மார்கழிமாத வழிபாட்டை நம் முன்னோர்கள் ஏற்படுத்தி உள்ளனர்.

நம் நாட்டில் மிகப்பெரும் சமயங்களாகப் போற்றப் பெறுவன சைவ வைணவ சமயங்கள். இவ்விரு சமயத்தலைவர்களால் கோயில் என்று வழங்கப்பெறும் தலங்கள் இரண்டு. ஒன்று தில்லை (சிதம்பரம்); மற்றொன்று ஸ்ரீரங்கம். இவ்விரு தலங்களிலும் இம் மாதத்தில் பெருவிழா நிகழ்வதை அனைவரும் அறிவர். தில்லையில் எழுந்தருளி நடனத் திருக்கோலக் காட்சி வழங்கும் ஸ்ரீ நடராசப்பெருமானுக்கு உகந்த திருநாள் திருவாதிரைத்திருநாள். ஸ்ரீரங்கத்தில் சயனத் திருக்கோலங் கொண்டு அருட்காட்சி வழங்கும் ஸ்ரீ ரங்கநாதப்பெருமாளுக்கு உகந்த திருநாள் வைகுண்ட ஏகாதசித் திருநாளாகும். இவ்விரு திருநாட்களும் இம்மார்கழி மாதத்தில் நிகழ்வதன் மூலம் இம்மாதத்தின் இறைவழிபாட்டின் சிறப்பை நாம் நன்கு அறியலாம். இம்மாதம் முழுவதும் தெய்வ வழிபாட்டில் திளைத்திருந்தால் இவ்வாண்டு முழுவதும் நாம் தொடங்கிச்செய்யும் செயல்களெல்லாம் நன்மையாகவே முடியும் என்பது நம் முன்னோர்கண்ட முடிபு. அம்முறையில் நம்நாட்டிலுள்ள திருக்கோயில்களிலெல்லாம் திருப்பள்ளியெழுச்சிவழிபாடு சிறப்பாக நிகழ்த்தப்பெறுகிறது.

தருமையாதீன அருளாட்சிக்குட்பட்ட திருக்கோயில்களிலும் மார்கழிமாத வழிபாடு சிறப்பாக நிகழ்த்தப்பெறுகிறது. தருமையாதீனம் 26–ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்குத் திருப்பள்ளியெழுச்சி வழிபாட்டை விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நாள்தோறும் சிறப்புற நிகழ்த்தியருள்கின்றார்கள். பின்னர் ஸ்ரீ ஞானபுரீசுவரர், ஸ்ரீ தருமபுரீசுவரர், ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்காம்பிகை திருக்கோயில்களில் வழிபாடு நிகழ்த்தி ஆதீனத் திருக்கோயில்களுக்கும் பிறதிருக்கோயில்களுக்கும் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்கு அருட்பிரசாதம் வழங்கி ஆசியருள்கின்றார்கள். ஆங்காங்கும் உள்ள மக்கள் பலருக்கும் இறைவழிபாட்டு முறையை உணர்த்தி அவர்களை இறைவழிபாட்டில் ஈடுபடுத்திப் பயன்பெறச் செய்யும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பல தலங்களுக்கும் எழுந்தருளி வழிபாடாற்றியருள்கின்றார்கள். மேலும் ஆதீன அருளாட்சிக்குட்பட்ட தலங்களுக்கு எழுந்தருளும்போது ஆதீன உயர் அலுவலர்களையும்

உடனழைத்துச் சென்று ஆதீனத் திருக் கோயில்களின் நிர்வாகத்தை மேற்பார்வையிடச் செய்து நெறிப்படுத்தியருள் வதும் குறிப்பிடத்தக்கது.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் நாள்தோறும் எழுந்தருளி நிகழ்த்தும் இச்சிறப்பு வழிபாட்டின் போது உலக நலங்கருதி சுவாமிக்கும் அம்பாளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்துவித்தும் பரிவட்டங்கள் அணிவித்தும் வழிபாடாற்றியருளினூர்கள்.

சோழ நாட்டையே சிவாலாயமாகக்கொண்டு வழிபடும் பழக்கத்தைப்பண்டுதொட்டே நம்முன்னோர்கள் மேற்கொண்டு உள்ளனர். அம்முறையை பின்பற்றியும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழிபாடாற்றியருள்கிறார்கள். மல்லிகார்ச் சுனம், மத்தியார்ச்சுனம், புடார்ச்சுனம் என்ற இம்மூன்று தலங் களும் இறைவன் எழுந்தருளி அருள்வழங்கும் தலங்களுள் சிறப்பாகப்போற்றப்படுகின்றன. மல்லிகார்ச்சுனம் வடநாட்டில் விளங்குகிறது. புடார்ச்சுனம் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளது. இவ்விருதலங்களுக்கும் இடைப்பட்ட தலமாக விளங்குவது மத்தியார்ச்சுனம். இதைத் தமிழில் திருஇடை மருதூர் என வழங்குவர். மத்தியம் – இடை, அர்ச்சுனம் – மருத மரம். திருஇடைமருதூர்த் திருக்கோவிலை நடுநாயகமாகக் கொண்டு சோழநாட்டைச் சிவாலயமாகக் காணலாம்.

திருஇடைமருதூர்த் திருக்கோயில் திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தின் அருளாட்சியில் அமைந்துள்ளது. திருவாவடுதுறை, ஸ்ரீ மகாலிங்கப்பெருமானுக்கு நேர்கிழக்கில் நந்தித்தலமாக விளங்குகின்றது. திருவலஞ்சுழி மகாலிங்கப் பெருமானுக்குத்தென்மேற்கு மூலையில் விநாயகரின் தலமாகவும் சுவாமிமலை ஸ்ரீ மகாலிங்கப்பெருமானுக்கு நேர்மேற்கில் முருகன் சந்நிதியாகவும் விளங்குகின்றன. திருச்சேய்ஞலூர் சண்டீசுவரர் அவதரித்த தலம். சண்டீசுவரர் தொண்டுசெய்து பேறுபெற்ற திருவாப்பாடி திருச்சேய்ஞலூருக்கு அருகில், திருப்பனந்தாளுக் குத் தென்மேற்கில் மண்ணியாற்றங்கரையில் உள்ளது. மகாலிங்கப்பெருமானுக்கு வடக்கில் சண்டீசுவரர் சந்நிதியாகத் திருவாப்பாடி விளங்குகின்றது. சூரியனூர்கோயில் திருஇடை மருதூருக்கு வடகிழக்கில் நவக்கிரகத் தலமாக விளங்குகின்றது. 'கோயில்' என்று சிறப்பிக்கப்படும் சிதம்பரம் தரிசிக்கமுக்தி தரும் நடராசப்பெருமானுக்குரிய தலமாக விளங்குகிறது. தருமை ஆதீனத்தின் அருளாட்சியிலுள்ள சீகாழி, மகாலிங்கப் பெருமானுக்குப் பைரவர் சந்நிதியாக விளங்குகின்றது. பிறக்க

முத்திதரும் திருவாரூர், மகாலிங்கப்பெருமானுக்குச் சோமாஸ்கந்தமூர்த்தமாக விளங்குவது. ஆலங்குடி, மகாலிங்கப்பெருமானுக்குத் தென்திசையில் தட்சிணாமூர்த்தி சந்நிதியாக அமைகிறது.

இவ்வாறு சோழப்பெருநாட்டில் பெருங்கோயில் அமைப்பாக விளங்கும் தலங்களையும் ஆதீன அருளாட்சிக்குட்பட்ட தலங்களையும் இம்மார்கழிமாதத்தலவழிபாட்டில் மேற்கொண்டு வழிபட்டு ஆங்காங்குள்ள அன்பர்களையும் இறைவழிபாட்டில் ஈடுபடுத்தி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் ஆசிவழங்கியருளுகின்றார்கள்.

திருப்பொன்னூசல் விழா

வேளூரில் :

தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்திய நாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ தையல்நாயகி உடனுகிய ஸ்ரீ வைத்தியநாதசுவாமிக்கு 28—12—84 வெள்ளிக்கிழமை முதல் பத்து நாட்கள் திருப்பொன்னூசல் விழா சிறப்பாக நடைபெற்றது. இந்நாட்களில் பெருமானையும் பெருமாட்டியையும் திருப்பொன்னூஞ்சலில் எழுந்தருளச்செய்து சிறப்பாக வழிபாடுகள் நிகழ்த்தப்பெற்றன. இரவில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவெம்பாவைப் பாடல்கள் ஓதுவார் மூர்த்திகளால் ஓதப்பெற்றன. 6—1—85 ஞாயிற்றுக்கிழமை திருவாதிரைத் திருநாளாதலின் ஸ்ரீ நடராஜப்பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் தரிசனமும் சிறப்பாக நடைபெற்றன. அன்பர்கள் பலரும் வழிபட்டுப் பயன் பெற்றனர்.

சீகாழியில் :

தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் 28—12—84 முதல் பத்துநாட்கள் ஊஞ்சல் – திருவெம்பாவை உற்சவம் சிறப்பாக நடைபெற்றது. இந்நாட்களில் திருமுறைகள் திருக்காப்பிடப்பெற்றுத் திருவெம்பாவைப் பாடல்கள்மட்டும் ஓதப்பெறுவது வழக்கம். நாள்தோறும் இரவில் சுவாமி அம்பாள் பிராகாரம் வலம்வருதலும் காலைமாலை இருவேளைகளிலும் பிராகாரத்தில் ஸ்ரீ மாணிக்கவாசகர் வலம்வருதலும் பின்னர் ஓதுவாமூர்த்திகள் திருவெம்பாவைப் பாடல்களை ஓதத்தீபாராதனையும் சிறப்பாக நடை

பெற்றன. 5—1—85 சனிக்கிழமை இரவு திருவாசகத்தின் ஒரு பகுதியாகிய திருப்பொன்னூசல் ஓதப்பெற்றுத் தீபாராதனையும் 6—1—85 திருவாதிரை நாளன்று ஸ்ரீ நடராஜப்பெருமான் திருவீதி யுலாவும் சிறப்பாக நடைபெற்றது.

கார்த்திகை ஞாயிறு தீர்த்த விழா

கருங்குயில்நாதன்பேட்டையில் :

தருமையாதீனத்திற்குச் சொந்தமான கருங்குயில்நாதன் பேட்டை அருள்மிகு ஆனந்தவல்லி உடனாகிய அருள்மிகு சக்திபுரீசுவரர் ஆலயத்தினின்று சுவாமி கார்த்திகை ஞாயிறு தோறும் அம்மையுடன் தருமபுரத்தின் காவிரி வடகரைக்கு எழுந்தருளித் தீர்த்தம் கொடுத்தருளல் சிறப்பாக நிகழ்வுற்றது. மயிலாடுதுறையைச் சார்ந்துள்ள பக்தர்கள் இவ்விழாவிற் கலந்துகொண்டு தீர்த்தமாடி இறையருள் பெற்றனர்.

குத்தாலத்தில் :

தருமையாதீனத்திற்குச் சொந்தமான குத்தாலம் என வழங்கும் திருத்துருத்தி அருள்மிகு அரும்பன்ன வனமுலை யம்மை உடனாகிய அருள்மிகு சொன்னவாறு அறிவார் கார்த்திகை ஞாயிறு தோறும் அம்மையுடன் காவிரிக்கு எழுந் தருளித் தீர்த்தம் கொடுத்தருளல் விழா நிகழ்வுற்றது. அன்பர் பலர் தீர்த்தமாடிப் பயனுற்றனர்.

திருக்கடவூரில் சங்காபிஷேகம்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமிர் தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் கார்த்திகைச் சோமவார நாட்களில் 1008 சங்காபிஷேகம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றிச் சங்காபிஷேக தீர்த்தம், பிரசாதம் வழங்கி யருளினார்கள்.

காவிரி முதலிய புண்ணிய தீர்த்தங்களைக் கொணர்ந்து அத்தீர்த்தத்தில் இருநூற்றைம்பதுக்கும் மேற்பட்ட பொருள் களைக் கலந்து சங்குகளில் நிரப்பி வரிசையாகப் பரப்பி நடுவில் உள்ள பீடத்தில் வலம்புரிச்சங்கை வைத்து வேள்வி முதலியன வற்றால் பூசித்துத் தீர்த்தத்தை முறைப்படி பெருமானுக்கு

அபிஷேகம் செய்வது சங்காபிஷேகம் ஆகும். இவ்வாறு இறைவனுக்குச் சங்காபிஷேகம் செய்வதால் உலக நலம் உண்டாகும்.

நாயன்மார் குருபூஜைத் திருநாட்கள்

தருமையாதீனத்திற்குச் சொந்தமான, ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயிலில் கார்த்திகைக் கார்த்திகை நாளில் (6—12—84) கணம்புல்லர் உத்திரதிருநாளில் (15—12—84) மெய்ப்பொருள் நாயனுர் மார்கழிச் சுவாதிநாளில் (18—12—84) மானக்கஞ்சாற நாயனுர் பூராடநாளில் (23—12—84) சாக்கிய நாயனுர் ரேவதிநாளில் (30—12—84) வாயிலார் நாயனுர் குருபூஜைத் திருநாட்கள் நடைபெற்றன. ஸ்ரீ நடராஜமூர்த்திக்கு அருச்சனை, வழிபாடுகள் நிகழ்த்தப் பெற்றன. வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், எம். ஏ., புராணம் வாசித்து வரலாறு கூறினர். ஆதீனத் தேவாரப் பாடசாலை, ஆகம பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் அன்பர்களும் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம் நடத்திய

தேவார இசைப் போட்டியில்

தருமையாதீனர் தேவாரப் பாடசாலை மாணவர் வெற்றி

தமிழக முதலமைச்சர் பெயரால் ஆண்டுதோறும் தமிழ்ப் பல்கலைக் கழகம் நடத்திவரும் இசைக்கருவிப்பரிசுப் போட்டி இவ்வாண்டு தேவாரம் பயிலும் மாணவ மாணவிகட்கு 12—12—84 அன்று நடத்தப்பட்டது. தமிழகத்தின் பல பகுதி களிலிருந்தும் தேவாரப் பயிற்சிபெறும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். தருமையாதீனத் தேவாரப் பாடசாலை மாணவர் செல்வன் R சங்கரநாராயணன் முதல் தகுதி பெற்ருர். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பெருமைமிகு வி. ஐ சுப்பிர மணியம் அவர்கள் மாணவனைப் பாராட்டி ரூபாய் ஆயிரம் விலைமதிப்புள்ள தம்புரா இசைக்கருவியைப் பரிசாகவழங்கிருர்.

உ

எதிர்காலம்

★

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(இரக்தாக்ஷிஸ்ரீ தைமீ 1உ முதல் 29உ முடிய)

(14—1—1985 முதல் 11—2—1985 முடிய)

	ரா		
சு செ	இராசி		
தூ கு			
பு	ல/	கே சனி	சந்

		செ	கே சனி
ல/ சு	அம்சம்		
தூ கு			பு
ரா			சந்

ஸ்ரீ இரக்தாக்ஷிஸ்ரீ மார்கழிமீ 29உ பானுவாரம் சித்திரை நக்ஷத்திரம் பாலவகரணம்கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 54 நாழிகை 5 விஞடிக்கு விருச்சிக லக்கினத்தில் ஸ்ரீலோகரட்சகரான சூரியபகவான் தனுர்ராசியிலிருந்து மகரராசி சங்கிரமணமாக தைமாதப் பிரவேசம்செய்தருளுகின்ருர். மறுதினம் முதல் தேதி சோமவாரம் உத்தராயண புண்ணியகாலம். மகரசங்கிரமணதேவதை துவாங்க்ஷி பாலில் ஸ்நானம் செய்து சிவப்பு வஸ்திரம் தரித்துக் குங்குமப்பூகந்தம்பூசி செண்பக புஷ்பம் சூடி முத்தாபரணம் பூண்டு வெள்ளிப் பாத்திரத்தில் பாயசம் உண்டு புலிவாகனம்ஏறி கட்க ஆயுதம் ஏந்தி தாளவாத்தியமும் முழங்கமேற்குமுகம்பார்த்து தென் திசையில்பயணம்செய்கிருள். அதனுல் ஸ்திரீகளுக்குப் பீடை, வியாபாரிகள் செல்வந்தர்கள் வீரர்களுக்குத் தீயன நிகழ்வதாயினும் சங்கிரமணகால கிரக ஸ்திதியால் அதிகம்பாதிப்பின்றி நல்லனஏற்படும். வெளுமைநிற

வஸ்துக்கள் வெள்ளி, வஸ்திரம், பருத்திநூல், பால்பண் டங்கள் இவற்றின் விலை ஏறுதலாக இருக்கும். இருப்பினும் அத்தியாவசியப் பொருள்களின் உற்பத்திப் பெருகி மக்கள் தேவைக்கு வந்துகொண்டிருக்கும். தேசங்களில் எங்கும் ஆன்றோர்களால் சமதர்மமாக சமுதாய நற்பணிகள் சிவபுண்ய கைங்கர்யங்கள் நடந்து நாடுகள் நலமுறும். தேசங்களில் மன்னர்கள் ஆளுநர்களால் செங்கோல் ஆட்சி நடந்து பிரஜைகள் சம்ரக்ஷிக்கப்படுவார்கள்.

உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் சிவராஜயோகத்தில்திருவீற்றிருக்கின்ற சிவஞானகுருமகான்கள் குருமகாசந்நிதானங்கள் லோகத்திற்கு நல்விஷய உரைகள் தம் திருவாய் மலர்ந்து சொற்பொழிந்து அருள்வார்கள். மாந்தர் களுக்கு சிவாசார நன்னெறிபோதித்து அந்நெறிமுறையில் சிறக்க ஆசியருளி அருள்பிரசாதம் வழங்குவர். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள் நியம விதிமுறைகளின்படி நடைபெற்றுவரும். எல்லா பிரஜைகளும் தெய்வ பக்தியினால் சிறந்து சுபிட்சமாய் இருப்பார்கள்.

1. மேஷம் :- அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும் பண வருமானம் வந்து நிறையும். கௌரவத்தில் இலக்ஷியபோக்காக நல்லவித செலவினங்களும் ஏற்படும். அடிக்கடி வெளியூர் பயணம் ஏற்படும். ஜனவரி 23உ அளவில் லிகிதங்களில் அரச காரியங்களில் நன்மதிப்பும் துரிதசெயல்முறைகளும் ஏற்படச் செய்யும். ஜனவரி 16, 17, 18 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ – உரோகிணி – மிருகசீரிஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். நல்ல பண வருமானம் தரும். வீடு, பூமி, இயந்திரங்களில் விசேஷ நற்பலன் வந்துசேரும். அடிக்கடி வெளியூர் பயணம் மேற் கொள்ளுதல் ஆகும். எழுத்துமூலங்களில் அரசாங்க அவசரம் இருந்து வரும். பிப்ரவரி 10 உக்குப்பூரணம் பெறும். எல்லா காரியங்களும்செவ்வையாக நடந்து கொண்டிருக்கும். ஜனவரி 19, 20 தேதிகள் சந்திராஷ்டமம் புதன் வியாழன் சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வரும். சகோதரருக்கு உயர்வுதரும். வீடுவாகனங்

களில் நல்லபிரயோஜனம் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். ஜனவரி 23-ந்தேதிக்கு எழுத்துமுல விஷயங்களில் விசேஷ நன்மைகளை உண்டுபண்ணும். எல்லாக்காரியங்களும் எளிதில் நடக்கும். ஜனவரி 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானங்கள் வரும். பூமி இயந்திரங்களில் நற்பலன் ஏற்பட்டு வரும். எழுத்துமூல விஷயங்களில் மூலதன பத்திரங்கள் தஸ்தா வேஜுகளில் நல்லன ஏற்படச் செய்யும். நீடித்த பலனுள்ள கைங்கர்யங்களைச் செய்யும். எல்லாக்காரியங்களையும் முறையு டன் செயல்படுத்திக் கொண்டிருக்கும். ஜனவரி 23, 24 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபம்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். பணவரு மானம் கணிசமாக வரும். ஜனவரி 23 தேதிக்கு எழுத்து மூல விஷயங்களில் ஒப்பந்தங்களில் நல்ல ஏற்பாடு நடக்கும். அரசாங்க நன் மதிப்பு தரும். எல்லாக்காரியங்களும் வெற்றிகர மாக நடக்கும். ஜனவரி 26, 27 தேதிகள் சந்திராஷ்டமம். பிப்ரவரி 4, 5 தேதிகளில் நற்கைங்கரியங்கள் நடக்கும். திங்கள் செவ்வாய் சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பணவரவும் சரிசமனாக இருந்து கொண்டிருக்கும். சகோதர ருக்கு நல்ல சௌகரியங்களை ஏற்படுத்தி தரும். வாகனசுகம் திருப்தியளிக்கும். வயிற்றில் அழற்சி நலிவு ஏற்பட்டுக் குண மாகும். எல்லா அலுவல்களும் நல்ல கௌரவத்தில் நடந்து கொண்டிருக்கும். ஜனவரி 28, 29 தேதிகள் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் தரும். ஜனவரி 23 தேதிக்கு மேல் எழுத்து மூல விஷயங்களில் தஸ்தா வேஜுகளில் நல்ல ஏற்பாடு நடக்கும். பூமி இயந்திரங்களில் விருத்தி பலன் ஏற்படும். எல்லாக்காரியங் களும் சிறப்பாக நடக்கும். ஜனவரி 30, 31 பிப்ரவா 1 இத்தேதி கள் சந்திராஷ்டமம். வெள்ளி சனி சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபபலனுக நடக்கும். நல்ல பணவருமானம் தரும். இயந்திர சாதனங்களிலும் சகோதர நலன்களிலும் செலவு ஏற்படும். நெருக்கமுள்ள மனுஷாள் மனவருத்தசம்பவம் ஆகும். ஜனவரி 21 தேதி அளவில் சுமுகம் காணும். எல்லாக்காரியங்களும் மதிப்புடன் நடந்துகொண்டிருக்கும். பிப்ரவரி 2, 3 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் சுபபலனுக நடக்கும். தனவருமானங்களில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்திவரும். பொன் மணி பூஷணம் தரும். வீடு வாகன பிராப்தியில் நல்ல சௌகரியம் தரும். ஜனவரி 23 தேதி அளவில் ஜீவனுேபாயத்தில் எழுத்து மூல விஷயங்களில் பிரகாசநிலைமையாகும். அரசாங்க நன்மையைஏற்படுத்தும். எல்லாக்காரியங்களும் சிறப்பாகநடைபெறும். பிப்ரவரி 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய் புதன் சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். பணவருமானம் தரும். இரத்தின பூஷணம் தரும். பூமியில் செந்நெல் பிராப்தியில் விருத்திபலன் ஏற்படும். ஓர் தீர்த்தயாத்திரைசென்று வருதல் ஆகும். எண்ணுகின்ற எல்லாக் காரியங்களும் வெற்றிகரமாக நடக்கும். பிப்ரவரி 6, 7, 8 தேதிகள் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம்-பூரட்டாதி ¾

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். பணவருமானங்கள் கெடியான தோரணைக்கு ஏற்ப வரவாகிக் கொண்டிருக்கும். கார்ய செலவினங்களும் ஏற்படும். சில இக்கட்டான நிலைமை சம்பவிக்கினும் தெய்வானுகூலத்தில் சமாளித்தல் ஆகும். எல்லாக்காரியங்களையும் பெருமதிப்பில்நடத்தச் செய்யும். பிப்ரவரி 9, 10 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். நல்ல தன வருமானம் வரும். பூஷணங்களின் பிராப்தியையளிக்கும். ஒப்பந்த லேவாதேவிகளில் கணிசமாகப் பெருந்தொகையை அடைதலாகும். ஓர் சுப விசேஷம் நடக்கும். எல்லாக்காரியங்களும் சுறுசுறுப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கும் ஜனவரி 14, 15 பிப்ரவரி 12 இத்தேதிகள் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபம்.

கடிதம் :

ஊரன் அடிகள் 18—12—84
வடலூர் 607303
தென்னார்க்காடு மாவட்டம்

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திருவடிகளுக்கு அடியேன் ஊரன் விண்ணப்பம்.

நமது ஆதீனப்புலவர் திரு. இரா. செல்வக்கணபதி டாக்டர் பட்டம் பெற்றதை அறிந்து மகிழ்கிறேன். எல்லாம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவருள்.

டாக்டர் பட்டத்திற்கான ஆராய்ச்சித் தலைப்பு "தருமபுர ஆதீனமும் தமிழும்" என்பது அழகிது. விரைவில் ஆதீன வெளியீடாகவே வெளியிட்டு தருமையின்புகழ் தரணியெங்கும் பரவச் சந்நிதானம் திருவுளங்கொள்ளப் பிரார்த்திக்கின்றேன். தமிழ் வளர்க்கும் தருமபுரம் என்று ஒருநூல் முன்னமேவந்திருப் பீனும் இது டாக்டர் பட்ட தீசிஸ் ஆனதால் இது ஒருவகையாக இருக்கும். தமிழ் உலகுக்கும் சைவ உலகுக்கும் நன்கு பயன் படும். "தருமபுர ஆதீனமும் தமிழும்" அச்சாகி வெளிவரும் நாளை எதிர்பார்க்கும்.

அடியவன்,
ஊரன் அடிகள்.

குருமணியின் அருள்மொழிகள்

கடவுள் உணர்வு

தெய்வ நம்பிக்கையும் பக்தி உணர்வும் மனிதனை மேலும் மேலும் உயர்த்துவன. அஸ்திவாரமில்லாத கட்டிடம் – ஊற்றில்லாத கிணறு – மணமில்லாத மலர் சிறப்படைய முடியுமா? அதுபோலக் கடவுள் உணர்வு இல்லாத வாழ்வு எவ்வாறு சிறப்புறும்?

குரு

குரு என்ற சொல்லுக்கு அறியாமையையும் பாவத்தை யும் போக்கிடுபவர் என்பதே பொருளாம். ஆன்மாக்களின் அறியாமையைப்போக்கி, அவை கடைத்தேற வழிகாட்டி, ஞானநெறியை உபதேசிக்கும் குருவினைத் தக்கவர்மூலம் அறிந்து அவரைச்சார்ந்து ஒழுகினல் நமது பிறவித்துன்பங் கள் நீங்கும். பேரின்பம் தலைப்படும்.

திருநாவுக்கரசர்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம். ஏ.

[தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் 2—12—1984 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப் பெற்ற கட்டுரை.]

முதல் ஞாயிற்றுக்கு ஒருபெருமையுண்டு; மகிமையுண்டு அன்பர்களுக்கு ஆன்ம தாகம் தீரும்நாளல்லவா அது! காலை 9-45 மணிக்கெல்லாம் திருமடத்தை அடைந்தேன். அன்பர்கள் ஆங்காகே காணப்பட்டார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் திருக்கோயிலுக்கு எழுந்தருளியிருந்தார்கள். அடியேன் ஸ்ரீ சொக்கநாதரை வழிபட்டேன். அஷ்டலட்சுமிக் கட்டில் கலைப்பொக்கிஷங்களைக்கண்டு ரசித்தேன்.

ஒருசிங்கம்; உருவம் அவ்வளவு தெளிவாக அடியேன் கண்ணுக்குப் புலப்படவில்லை. சிங்கத்தின் மேல் ஒருமுனிவர் அமர்ந்திருக்கிறார். வலக்கை அபயஹஸ்தம். இடக்கையை இடத்தொடையின் மேல் வைத்துள்ளார். வலக்கால் பூமியை நோக்கியவாறு தொங்க - இடக்காலை வலக்கால்மேல் வைத்துக் கொண்டு கருணையோடு காட்சி தருகிறார்! - அவர் ஸ்ரீ குமர குருபரர் என்பது அடியேன் எண்ணம்.

அடியேன் சிந்தனைக்குப் - பண்டாரக் கட்டினின்று எழுந்த மகுடவோசை வேலியாயிற்று. விரைந்தேன்; அன்பர்களோடு அடியேனும் திருநீறுபெற்று அணிந்து அமர்ந்தேன் - தேவாரப் பண்ணிசை நிறைந்தது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அருளாணையின் வண்ணம் தருமையாதீனம் - தேவஸ்தானக் கண்காணிப்பாளரும் திருவாசகம், திருமந்திரம்முதலியதிருமுறை களில் மிகவும் ஈடுபாடுடையவரும் ஆகிய திரு. டி. என். அருணசலம் பிள்ளை திருவாசகத்தின் அருமைபற்றியும் பொற் சுண்ணம் என்ற பகுதியின் சிறப்புப்பற்றியும் உணர்ச்சி பூர்வ மாக உரையாற்றினர்.

தொடர்ந்து, குருமணிகள் தமக்கே உரிய இனிய குரலோடு 'உலகெலாம்' எனத் தொடங்கும் பெரியபுராணக் கடவுள் வாழ்த்துப் பாடலை இசைத்து உபதேசம் தொடங்கினர்கள்.

கார்த்திகைஞாயிறுகளில் தீர்த்தமாடல் விசேஷம் என்றும் ஒளிவடிவாய் விளங்கும் இறைவனே எண்ணிக் கார்த்திகை நாளில் தீபமிடுதலின் சிறப்பினையும் முதலில் மாதச்சிறப்பாகச் சுட்டினர்கள். "சோதியே, சுடரே, சூழ்ஒளிவிளக்கே" என்னும் தொடரை இறைவன் சோதிவடிவானவன் என்பதை விளக்கி மேற்கோளாக்கினர்கள்.

திருநாவுக்கரசர் புராணச் சிந்தனையாக, வேதாரணியம் தரிசித்தது முதல் முத்திப்பேறடைந்தமை ஈருக உள்ள பகுதி களைத் தத்துவச் செறிவு ததும்பச் சுருக்கமாகவும் தெளிவாகவும் கருத்துக் கோவையுடனும் அன்பர்கள் மனம்கொள அருளிச் செய்தார்கள்.

நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் திருமறைக்காடு தரிசித் தனர். அப்போது ஞானசம்பந்தரை மதுரைக்குவரவழைக்க எண்ணி மங்கையர்க்கரசியார் ஓலை கொடுத்தனுப்புகிருர். ஓலைச் செய்தி பறிந்த சம்பந்தர் சமண இருள் நீக்கிச் சைவ ஒளிபரப்பத் திருவுளம் கொண்டார். திருவெண்ணீற்றின் துணிவுகொண்டு பாண்டிநாடு புறப்படத்துணிந்தார்.

அப்போது நாவுக்கரசர், "சமணர்கள்வஞ்சனைமிக்கவர்கள்; எமக்கு, முன்னுளில் தீங்குபல இழைத்தனர். அவர்களைப்பற்றி நன்கு அறிவேன்; எனவே, அங்குச் செல்வதை இசையோம்"— என்ருர்.

சம்பந்தர், திருநீற்றின்பால் எல்லையற்ற அன்புகொண்ட மங்கையர்க்கரசியாரையும் குலச்சிறையாரையும் கரண வேண் டும் என்னும் தம்கருத்தைத் தெரிவித்தார். "சைவம் பாலித்துச் சமண இருளை அகற்றியன்றி மீளேன்" என்ருர். குருமணிகள் இப்பகுதியை "ஆளும் நாயகம் இருக்கைகண்டல்லால் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்" என்ற நாவுக்கரசரின் கயிலை காணும் உறுதிப்பாட்டோடு ஒப்புமைப்படுத்தி அழகுற விளக் கினர்கள். நாவுக்கரசரை மதுரை வரவேண்டாம் என வேண்டி ஞானசம்பந்தர் மதுரைக்கு ஏகியருளினர்.

நாவுக்கரசர் திருவீழிமிழலை தரிசிக்க விரும்பினர்; புறப் பட்டார் –'ஆபத்துக் காலத்தில் உதவியவர்களை அடிக்கடி நன்றியோடு நினைந்து போற்ற வேண்டுமல்லவா! –குருமணிகள் இப்படிக் கருத்துச் செறிவோடு இதனை விளக்கினர்கள். பஞ்ச காலத்தில் அடியார்கட்கு உணவுதந்த இறையருளை நினைந்து நாவுக்கரசர் வீழிமிழலையைத் தொழ விரும்பினர்.

திருநாகைக் காரோணம், மயிலாடுதுறை வழிபட்டார். திருவாவடுதுறைபணிந்தார். அம்பிகை மயிலாகவந்து வழிபட்ட தலம் மயிலாடுதுறை. பசுவாக எழுந்தருளி வழிபட்ட தலம் ஆவடுதுறை. ஆவடுதுறையில் பெருமானை வழிபட்டு "மாயிரு ஞாலமெல்லாம்" எனத்தொடங்கும் திருப்பதிகம்பாடியருளினர். அப்பதிகப் பாடலில்,

"காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல வூரர்க் கம்பொன்
ஆயிரம் அளிப்பர் போலும் ஆவடு துறைய னாரே"

என்ற தொடர்களால் சிவபாத இருதயர், யாகம் செய்வதற்காக ஞானசம்பந்தர் வேண்டியவாறு ஆயிரம் பொன்னுடன் கூடிய உலவாக்கிழிபெற்ற வரலாற்றைக் குறித்தருளிய பாங்கினைக் குருமணிகள் சுட்டி விளக்கம் அருளினார்கள்.

நாவுக்கரசர் பழையாறை சென்றார்; வடதளியில் அமர்ந்த திருக்கோயிற் பெருமானை வழிபட்டார். பழையாறை என்னும் ஊர்பற்றிக் குருமணிகள் விளக்கும் போது 'அஃது அந்தட்புரம் எனச்சில ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர் என்றும் மணிமுடிச் சோழன் மகளார் மானி (மங்கையர்க்கரசியார்) வாழ்ந்த இடம் என்றும் குறிப்பு அருளினார்கள்.

பழையாற்றில் சமணர்களால் மறைக்கப்பட்டிருந்த சிவ லிங்கத்தை உண்ணு நோன்பு இருந்து வெளிப்படுத்தினர். சோழன் கனவிடை இறைவன் எழுந்தருளி "நாவுக்கரசர் நம்மை வழிபடுமாறு சமணர்களை அழித்து ஆலயம் செய்க" என அருளினர். சோழனும் திருப்பணி செய்வித்தான். அப்பர் அக்கோயிற் பெருமானை வழிபட்டு இந்நிகழ்ச்சியைப் புலப் படுத்தியருளினர்.

"தலையெ லாம்பறிக் குஞ்சமண் கையர்கள்
நிலையி னல்மறைத் தால்மறைக் கொண்ணுமோ"

என்பது அப்பதிகத் தொடர். இங்ஙனம் விளக்கியதோடு வடதளி ஓமரம்புலியூர் என வழங்கப்படுவது என்னும் குறிப் பையும் அங்குச் சமண் கோயில்கள் இக்கோயிலின் அருகே அமைந்திருந்தன என்பதையும் சிவன் கோயில் திருப்பணி இறையருளால் சோழமன்னனல் நிகழ்வுற்றது என்பதையும் சுட்டினர்கள்.

ஒருதத்துவத்தை நாமுய்யஎடுத்தோதினர்கள்; "சுவாமிக்கு ஊறுவந்தால் நமக்குத் தீமைவரும்; இதனைக்கெடுவது காட்டும் குறியாகக் கொள்ள வேண்டும். சுவாமியின் உருவம் நமக்கு நன்மைசெய்வது. நன்றியோடு வழிபடுதல் நம் கடமை"

காந்தியடிகள் பிற் காலத்தில் மேற் கொண்ட அஹிம்சை வழியிலான உண்ணு நோன்பு – நாவுக்கரசர் பழையாறையில் உலகுக்கு உணர்த்திய நெறி, ஒரு சாத்விகப் போராட்டம் – என ஒப்பிட்டமை சமய – தேசியஉணர்வுகளைத் தூண்டுவதாய் அமைந்திருந்தது.

அப்பர் சுவாமிகள் தலயாத்திரை தொடர்ந்தது. சிலந்திக்கு அரசபதவியளித்த ஆனைக்கா அரனைப் பணிந்தார். எறும்பியூர் சிராப்பள்ளி, கற்குடி, பராய்த்துறை தரிசித்தார்.

கற்குடி – உய்யக்கொண்டான் என வழங்கப்படுகின்றது, குருமணிகள் கற்குடிப்பதிகத் தொடர் ஒன்று கொண்டு 'கடவுள்' என்றசொல்லை அற்புதமாக விளக்கினர்கள். கடவுள் – கடந்தவர். எவற்றை? – "துன்பமோடு இன்பமதெல்லாம் கடந்தவர்" என்கிறது கற்குடிப் பதிகத்தொடர். மேலும் தலச் சிறப்புக்களையும் விளக்கியருளினர்கள்.

திருப்பைஞ்ஞீலியின் அருகில் இறைவன் சோலை, குளம் ஆக்கி அந்தணர் வடிவுடன் பொதி சோறு சுமந்து நாவுக்கரசர் வரவு எதிர்நோக்கி யிருந்தார். நாவுக்கரசர் வந்தவுடன் அன்போடு அவர்க்கு உணவு நல்கி இளைப்பைப் போக்கினர், நாவுக்கரசருடன் திருப்பைஞ்ஞீலி போந்து மறைந்தார். நாவுக்கரசர் திருவண்ணுமலை சென்று வழிப்பட்டார். தொண்டை நாட்டுத் தலயாத்திரையாகத் திருவோத்தூரைத் தரிசித்துக் காஞ்சி அடைந்தார்.

கச்சிமயானம், மேற்றளி, திருமாற்பேறு தரிசித்தார். கச்சி மயானம் என்பது சுவாமி சந்நிதியின் வலப்பக்கம் இருப்பது எனக் குறித்தார்கள். மேலும் கச்சிமயானம் என்ற வழக்கைக் கடவூர் மயானம் நாலூர் மயானம் என்பவற்றேடு ஒப்பிட்டார்கள்.

மதுரை, திருப்புகலூர், பூந்துருத்தி முதலிய இடங்களில் உழவாரப்பணி செய்தது போலவே கச்சியிலும் பணிசெய்தார் காஞ்சியின் பெருமைகள் பலவற்றையும் குருமணிகள் எடுத்தோதினர்கள். திருவாரூரில் "ஒருவனைய் உலகேத்த நின்ற நாளோ" என்று பாடிமைபோலக் காலத்தால் முற்பட்ட சமயச்

செழிப்புமிக்க தலம் காஞ்சி. 64 சக்திபீடங்களில் ஒன்று, ஏகாம்பரநாதரும் காமாட்சி அன்னையும் – சிவமும் சக்தியுமாக அருள் பாலிக்கின்ற சிறப்பை அருளி – பிருங்கிமுனிவர் வரலாற்றையும் திருவான்மியூர்த் தலபுராணம் கொண்டு விளங்கினர்கள்.

சிவபெருமானை வழிபட எண்ணி வண்டுருவம் எடுத்தார் பிருங்கி முனிவர். சிவனும் சக்தியும் பிரிப்பற்றது என்ற தத்துவத்தை அவர் வரலாறுகாட்டும் என அருளிப் 'பரங்கிமலை' என்னும் சென்னைப் பகுதி 'பிருங்கிமலை' என்பதன் திரிபு எனக் கூறுவாரும் உளர் என இயைபு நோக்கிச் சுட்டினர்கள்.

இடையிடையே சைவசித்தாந்தச் செந்நெறி விளக்கம் அளித்தார்கள். "சுத்த பூஜை என்பது சிவபூஜை மட்டுமே" கேவலநிலை என்பது தனிமைநிலை. தாழ்ந்த பொருளோடு தனித்த நிலையில் இருப்பது என்பது இதன்பொருள். சகலம் – கலந்தது; சம்பந்தம் உடையது அதாவது கலையுடன் கூடியது. நாம் திருவருளின் தன்மையறிந்து உலகவாழ்வில் ஈடுபாடு அற்றுச் சுட்டற்ற நிலையில் இருக்கவேண்டும். இதனைப்

" பொற்கொழுக் கொண்டு வரகுக் குழுவதென்
அக்கொழு நீயறிந்து உந்தீபற
அறிந்தறி யாவண்ணம் உந்தீபற "

எனத் திருவுந்தியார் விளக்கும் – இவ்வாறு புராண சாத்திர இயைபுடன் காஞ்சியின் பெருமைகளை அருளினர்கள்.

திருநாவுக்கரசர் கழுக்குன்றம், திருவான்மியூர், திருமயிலாப்பூர்க் கபாலீச்சரம், திருப்பாசூர் தரிசித்தார். திருவாலங்காட்டை நண்ணினர். அப்பருக்கு அங்கே திருக்கயிலாயம் தரிசனம் செய்ய வேண்டும் என்ற உணர்வு தோன்றியிருக்கவேண்டும். காரைக்காலம்மையார் கயிலை சென்று பெருமான் அருள்பெற்று மீண்டு ஆலங்காட்டிறைவனை அண்மி வாழும் நிலையை அங்கே கண்ட அப்பர் கயிலைகாணும் உணர்வு பெருகினர் – இங்ஙனம் குருமணிகள் விளக்கியபோது உள்ளம் சிலிர்த்தது.

ஞானசம்பந்தர் காளத்தியைக் கண்டபோது அவ்வுணர்வு பெற்றார். இமயமலையில் ஆதிசேடனுக்கும் வாயுபகவானுக்கும் நிகழ்ந்த போட்டியில் – ஆதிசேடன் இமயத்தை உடலால் இறுகத்தழுவினன். வாயு பெருங்காற்ருக வீசினன். மலையின் உச்சி சிதறிற்று. காளத்தியில் ஒருசிதறல். சிராப்பள்ளியில் ஒன்று இலங்கைத் திரிகோணமலை ஒன்று. காளத்தி இமயச் சிதறல் ஆதலால் ஞானசம்பந்தர் ஸ்ரீ காளத்தியைக் கயிலையாகக் கண்டார்.

நாவுக்கரசர், காளத்திமலைக்கும் சென்றார். கயிலை நோக்கிச் செல்லும் எண்ணம் வளர்ந்தது. திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்) தெலுங்கு, கன்னட தேசங்கள் இலாடதேசம் (வங்காளம்) மத்தியப்பிரதேசம் முதலியன கடந்தார். வாரணாசி அடைந்தார்: பெருமானைத் தரிசித்தார். இமயம் நோக்கிச்சென்றார். சுரம்பல கடந்தார்; தசை தேய்ந்தது; எலும்புகள் தேய்ந்தன. உறுதி தேயவில்லை!

இமயப்பகுதியில் முனிவர் வேடத்தொடு பெருமான் எதிர் தோன்றினர். " கயிலை செல்லற்கு அரியது " என்றார். " ஆளும் நாயகன் இருக்கைகண்டு அல்லால் மீளேன் " என்றார். நாவுக்கரசர் உறைப்புக்கண்ட முனிவர் மறைந்தார். " ஓங்கு நாவினுக்கு அரசனே ! " என அசரீரியாக விளித்தார். " இத் தடாகத்தில் மூழ்கித் திருவையாற்றில் எழுக, கயிலைக் காட்சி காண்க " என்றார். நாவுக்கரசரும் பொய்கையில் மூழ்கித் திருவையாற்றில் எழுந்தார். அம்மையப்பராக இறைவன் கயிலைக்காட்சி தந்தார். " மாதர்ப்பிறைக் கண்ணியானை " என்ற பதிகம் பாடிப்பரவினார்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டுத் திருநெய்த்தானம் வழிபட்டுப் பூந்துருத்தி அடைந்தார். ஞாயிறும் திங்களும் தோயும் திருமடம் அமைத்துத் தொண்டாற்றி இருந்தார். அங்குப் பல் வகைத் திருத்தாண்டகம், தனித் திருத்தாண்டகம், அடைவுத் திருத்தாண்டகம், திருவங்கமாலை முதலியன பாடியருளினார்.

' பாண்டிநாட்டில் சைவம் தழைக்கச்செய்து மீள்கின்றார் சம்பந்தர் ' என அறிந்தார் நாவுக்கரசர். திருப்பூந்துருத்திக்கு அருகே ஞானசம்பந்தர் வருதல் அறிந்து அங்குச்சென்றார். அவர் அமர்ந்துவந்த சிவிகையைத் தாங்கினார். ஞானசம்பந்தர் இதனை அறியாராய் " அப்பர் எங்குற்றார் " என வினவினார். " உம்மடியேன உம்மடிகள் தாங்கிவரும் பேறுபெற்று இங்குற்றேன் " என்றார் அப்பர். ஞானசம்பந்தர் உடனே சிவிகையினின்று இறங்கினார். அப்பரைத் தொழுதார். இருவரும் அன்பிற் பிணைந்தனர். இது மூன்றும் சந்திப்பு. ஞானசம்பந்தர் மதுரை நிகழ்வுகளைக்கூறினர் ; மானி – குலச்சிறையார் பெருமைகளை எடுத்துரைத்தார். நாவுக்கரசர் அவர்களைக் காண விரும்பிப் புறப்பட்டார். பல தலங்களையும் வணங்கி மதுரையடைந்து பெருமானைப்பாடிப்பரவினார். பாண்டிமாதேவி, கூன் நிமிர்ந்த பாண்டியன், குலச்சிறையார்தொழ அங்கிருந்தார்.

திருப்பூவணம், இராமேச்சுரம், திருநெல்வேலி, கானப்பேர் (காளையார்கோயில்) தரிசித்தார். சோழநாடு மீண்டார்; திருப்புகலூரில் இறையடி தொழுது வீற்றிருந்தார்.

அப்பர் மதுரைப்பெருமானை "முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி" என்ற பதிகத்தால் பரவியமையையும் திருப்பூவணத்தில் "வடிவேறு திரிசூலம்" எனக் காட்சிகண்டு பரவிய பாங்கினையும் குருமணிகள் விளக்கினர்கள். மேலும் பாண்டிநாட்டுத் திருத்தலங்களில் இராமேசுவரம் இராமன் சிவபெருமானை வழிபட்ட தலம் – திருச்செந்தூர் முருகன் பெருமானை வழிபட்ட தலம் எனச் சிறப்புத் தன்மை சுட்டினர்கள். தருமபுரம் பாவம் அகலும் பொருட்டு எமதருமன் பூசித்த தலம் என இயைபு நோக்கி அருளினர்கள்.

திருப்புகலூரில் இறைவன் அப்பரின் பற்றற்ற நிலையை உலகுக்குக் காட்ட எண்ணினர். உழவாரப் பணி செய்யும் இடங்களில் பரல்களுடன் மணியும்பொன்னும்விரவச்செய்தார். அப்பர் கண்டார். எல்லாம் ஒன்ருகவே கருதினர். ஒன்ருகத் திரட்டிவெளிக்கொணர்ந்து கொட்டினர். அவர்துறவுநிலைகாட்ட எண்ணிய பெருமான் விண்ணுலக அரம்பையரை அவர் முன் ஆடுமாறு செய்தார். அப்பர் உறுதிதளர்ந்தாரிலர். திருத்தொண்டில் முனைப்பாக இருந்தார். "பொய்ம்மாயப் பெருங்கடலில்" எனும் பதிகம் பாடினர். பெருமான் திருவடிகளை அடையும் காலம் அண்மையில் இருப்பதாக எண்ணினர். "எண்ணுகேன்" எனத் தொடங்கும் தாண்டகத்தின் வாயிலாகப் "புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்" எனக் கசிந்து வேண்டினர். சித்திரைச் சதயநாள் ஒன்றில் சிவன் சேவடிக் கீழ் அமர்ந்தார் – இவ்வாறு குருமணிகள் புராண நிறைவு செய்தார்கள். மனம் பக்திப் பெருக்கில் திளைத்தது. அப்பர் சுவாமிகளின் வரலாறும் நோக்கங்களும் என்றும் நெஞ்சைவிட்டு நீங்காதவாறும் – அருளாளர் வழி ஒழுகுமாறும் அவர்கள் செறிவோடு அருளிச் செய்தார்கள்.

மங்கலவாழ்த்துடன் நிறைவுற்றது. பண்டாரக்கட்டிலிருந்து வெளியில் வருகிறோம். கனிவும் கனிச்சாறும் பெற்றோம். இல்லம் திரும்புகிறோம்.

நாவரசர் வழிநடத்தும் சற்குருவின்தாள் வாழ்க!

நாவலரின் நற்சிந்தனைகள்

அருள் பற்றிய விளக்கம்

அருளாவது இவை தொடர்புடையவை என்றும் இவை தொடர்பில்லாதவை என்றும் நோக்காது இயல்பாகவே எல்லா வுயிர்கண்மேலுஞ் செல்வதாகிய கருணை. அருளெனினும், கருணையெனினும், இரக்கமெனினும் பொருந்தும். உலகவின்பத்துக்குக் காரணம் பொருளேயாதல் போலத் தருமத்துக்குக் காரணம் அருளேயாம். அருளென்னும் குணம் யாவரிடத்திருக்குமோ, அவரிடத்தே பழி பாவங்களெல்லாம் சிறிதும் அணுகாது நீங்கிவிடும்.

வாய்மையாகிய தகழியிலே பொறுமையாகிய திரியை இட்டு, தவமாகிய நெய்யை நிறையப் பெய்து, அருளாகிய விளக்கை ஏற்றினால், அஞ்ஞானமாகிய பேரிருள் ஓட்டெடுப்ப, பதியாகிய மெய்ப்பொருள் வெளிப்படும்.

மரண பரியந்தம் தன்னுயிரை வருந்திப் பாதுகாத்தல்போலப் பிறவுயிர்களையும் வருந்திப் பாதுகாப்பவன் யாவன், அவனே உயிர்களுக்கெல்லாம் இதஞ் செய்பவனாகி, தான் எந்நாளும் இன்பமே வடிவமாக இருப்பன்.

உயிர்களெல்லாம் கடவுளுக்குத் திருமேனிகள்; அவ்வுயிர்களுக்கு நிலைக்களமாகிய உடம்புகளெல்லாம் கடவுளுக்கு ஆலயங்கள். ஆதலால் கடவுளிடத்து மெய்யன்புடையவர்கள் அக்கடவுளோடு உயிர்களுக்கு உளதாகிய தொடர்பு பற்றி அவ்வுயிர்களிடத்தும் அன்புடையவர்களே யாவார்கள். உயிர்களிடத்து அன்பில்லாத பொழுது கடவுளிடத்து அன்புடையவர் போல் ஒழுகுதல் நாடக மாத்திரையே யன்றி உண்மையன்றென்பது தெள்ளிதிற்றுணியப்படும்.

பிறவுயிர்களிடத்துஇரக்கமில்லாதவர்தம்முயிருக்கு உறுதி செய்து கொள்ளமாட்டார். ஆதலால், அவர் பிறவுயிர்களிடத்து மாத்திரமா தம்முயிரிடத்தும் இரக்கமில்லாதவரே யாவர். அவர் தமக்குத்தாமே வஞ்சகர்.

— சைவப்பேராசிரியர் யாழ்ப்பாணம்
ஆறுமுக நாவலர் அவர்கள்